கி. அப்புலிங்கம்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கோற்றவன்குடி

உமாபதி சிவாசாரிய சுவாமிகள்

இயற்றியருளிய

ஞானபூசாகரணம், ஞானபூசை, ஞானதீட்சை, ஞானந்தியேட்டி, போசனவிதி.

இவை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரஆதீனத்து

உச வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள் கட்டளையிட்டருளியபடி

தருமபுர ஆதீனத்து அடியார்குழாத்துள் ஒருவராகிய

ஸ்ரீமத் சட்டைநாதத்தம்பிரான் அவர்கள்

எழுதிய குறிப்புரையுடன்

வித்துவசிகாமணி

ஸ்ரீகாழி ப. அ. மூத்துத்தாண்டவராயபிள்ளை

அவர்களால்

சீகாழி

திரிபுரசுந்தரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

1934

சாத்தி
திருப்

உ

குருபாதம்.

முகவுரை.



தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழு வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்கடொழக் கண்டு
ஞானத் தாயுனை நானுந் தொழுவனே.

திருச்சிற்றம்பலம்.

முப்பொரு ளுண்மை நாளு மொழிந்தருண் மெய்கண் டான்றன்
திப்பிய சந்தா னத்துத் திருநகர்த் தருமை மேவி
இப்புவித் தொடர்பி னீக்கி யென்னையு மடிமை கொண்ட
சுப்பிர மணிய ஞானத் தோன்றன்மெய்த் துணைத்தாள் போற்றி.

திருக்கைலாய பரம்பரையில் ஞானாவரண சித்தாந்த பௌமப் பிரதமாசாரியராகிய ஸ்ரீ மெய்கண்டதேவர் சந்தான சாம்பிரதாய ஞானாவிச்சின்ன ஞானப்பிரவர்த்தக ஸ்ரீகுருஞானசம்பந்ததேசிகேந்திரப் பிரதிஷ்டித தருமபுர வாதீனத்துப் பண்டாரசாத்திரங்களுள் ஞானாசார சாத்திர பஞ்சகம் என்னும் இந்நூலும் ஒன்று.

இது ஞானபூசாகரணம், ஞானபூசை, ஞானதீட்சை, ஞானாந்தியேட்டி, போசனவிதி என்னும் ஐந்துபிரிவினது.

4

இது மெய்கண்ட சந்தானத்துச் சமய விசேட நிருவாணதீக்கைபெற்று அங்கிலேயில் நிற்புழிமேலும் பரிபாகம் முதிர, அவ்வமயமறிந்து ஞானசாரியனால் அனுட்டிப்பிக்கப்படுவனவும் ஞானசீடனால் அனுட்டிக்கப்படுவனவும் அவற்றின் காரணமும் ஆகிய ஐந்து ஞானசார நூல்களின் தொகுதி.

இந்நூல் இப்பெயரான் வழங்கப்படுவது 'ஞான சரிதமிது மெய்கண்டான் சந்தானத்தே' என ஆசிரியர் தாமே நூலிறுதியிற் கூறுமாற்றாற் புலனாம். சரிதம், ஆசரிதம், ஆசாரம், ஒழுக்கம் என்பன ஒரு பொருளன.

இது மெய்கண்ட சந்தான துரீய பீடாதிபதியும் சத்தியோ முத்திப்பிரதரும் ஆகிய ஸ்ரீஉமாபதிசிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்தது.

இந்நூற்பகுதிகளைத் தருமபுர ஆதீனத்தில் இற்றைக்குச்சுமார் முன்னூறு வருடங்களுக்குமுன் எழுந்தருளியிருந்து வடமொழிக்கடலை நிலைகண்டுணர்ந்த சிவாகமப் பெரும் புலவரும், துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் முதலிய பல மாணவர்கட்குஞ் செந்தமிழ்த்தெள்ளமுதருத்திய பேராசிரியரும், அணிமாதியஷ்டசித்திகளும் கைவரப்பெற்றவரும், சிவஞானநிஷ்டாபரரும் ஆகிய ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் தமது ஆதீனப் பண்டாரசாத்திரங்களுள் முத்தி நிச்சயத்திற்குத் தாமியற்றிய மாபாடியத்தினும், ஞானவரணவிளக்கத்திற்குத் தாமியற்றிய அரும்பத விவேகவுரையினும் எடுத்துக்காட்டிச் செல்லுமிடங்கள் பல. அவற்றுட் சில மேற்காட்டுதும் ஆண்டுக்காண்க.

இந்நூற்பகுதிகளுள் முதலாவது ஞானபூசாகரண மென்பது. நிஷ்டையெய்திப்பிரிந்த சிவஞானி ஞானபூசை ஞானசந்தியாகிய கிரியையைச் செய்தல் எதற்கு? என்பதாதி வினாக்களை நிகழ்த்தித்தடை விடைகளாற் சமாதானமும் ஆவசியகமும் கூறும் முப்பது செய்யுளையுடையது.

<u>சத்தியஞானி</u> என்னுஞ் சிறப்புத் திருநாமம் பெற்ற எமது வெள்ளியம்பலவாணமுனிவர்பெருமான் இப்பகுதியுள் எட்டாவது செய்யுளை முத்திநிச்சயமாபாடியத்துள்

"முற்பவ மெவற்று முற்று முதுதவ வலியாற் சைவத்
தப்பருஞ் சரியை யாதி சரித்தருள் சார்வ ரன்றிச், செப்
பிய தொழில்செய் யாதே திருவருள் சேர்வோ ருண்டே,
லிப்பவ மொழிந்த முற்பா லியற்றின ரென்ன லாமே."

(என்னும் ஞானபூசாகரணத்தில் உமாபதிசிவாசாரியார் கூறுமாறே எல்லா மொருபிறப்பிற் கற்றனுட்டித்து முடியாமையின் முன்னுள்ள பிறப்பிலே முடிவனவெல்லா முடிந்து இப்பிறப்பிற் பெரும்பான்மையுங் குருபணிவிடை மாத்திரத்தின் அக்குருவருளாற் பெற்ற சிவானுபூதியுடையோர் உண்மை மாத்திரந் தெளிதற்கேற்ற அத்தியாத்ம சாத்திரமான உபதேச கலாபாகங்களைக் கற்றதனுனேயமைதிபெற்றிருப்பாராகலின்) என எடுத்தாளுதல் காண்க.

இன்னுமிச்செய்யுளை முனிவர்பெருமான் ஞானவாணவிளக்கத்தரும்பத விவேக உரையில் எடுத்தாளுமிடம் பல.

இரண்டாவது ஞானபூசை. இது சிவநிட்டையெய்திப்பிரிந்த சிவஞானிகளாகிய ஸ்ரீமெய்கண்ட சாந்தானிகர்கள் செய்தற்குரிய ஞானசந்தி ஞானபூசா விதியைக்கூறும் பதினெட்டுச் செய்யுளையுடையது.

முனிவர்பெருந்தகை ஞானாவரணவிளக்கத்தரும்பத விவேக உரையின் மார்க்க விவேகமென்ற பகுதியில் (இப்பகுதியைப்பற்றி எடுத்துக்கூறுவனவற்றுட் சில கீழ்வருவன காண்க).

“பணித்தவரு ளுடன்சந்தி பண்ணினோர்கள்” என்பதுமுதல் “எழுந்தலர்தூய்ப் பணிந்திருந்து” என்பதீறாப் பதினெட்டுத் திருவிருத்தமும், ஞானசந்தியும், ஞானபூசையும் பண்ணுமாறு கூறுகின்றன என்க. “இவற்றின் பொருள்வெளி இவ்வாறு வருவது ஸ்ரீமத் வாதுளாகமத்தில்” என்று கூறி மேல் வாதுளாகமத்தில் உள்ள ஞானபூசாவிதி படலம் முழுதும் எடுத்துக்காட்டி. மேலும் இவ்விரண்டு நூலையும் ஐகபத்தியஞ்செய்து காட்டுமுறையில் ஈண்டு

[illegible]
[illegible]

என வருவன தமிழில் ஒண்புனலாலுடற்சுத்தியோ ங்குளித்து என்றற்றொடக்கத்திற்குச் சிறப்பு விதியாகவும்

[illegible]

என்புழி பிராணயாமங் கூறுதிருக்கவும் தமிழில் நேராடிப் பிராணயாம நியாதமெய்தி என்றது பக்ஷாந்தரமாய்க் கூறினதுபோலவும் ஈண்டு

[illegible]

என்றிருக்கத் தமிழில் சனகாதி நால்வரென்றது பக்ஷாந்தரங் கூறினது போலவும் வரும். பிறவுமீண்டு

[illegible]

எனப் பொதுப்படக் கூறியதற்குத் தமிழில் விரவு முபாபதிசிவ னன்மறை ஞானசம்பந்தன் என்றற்றொடக் கத்தாற் சிறப்பித்து வருவனவும் இவைபோல்வன பிறவும் இவ்வாறே மாறுபாடின்றிக் கொள்க எனக்கூறிச் செல்லு தல் காண்க.

துறைசைச் சிவஞானயோகிகள் சித்தாந்தமரபு கண் டனகண்டனத்தில் (அபிடேகஞ்செய்து திருவொற்றுடை சாத்திப் பீடத்திலெழுந்தருளுவிக்குமளவும் லிங்கசுத்தி அகன்பின் ஆவாகனுதியெனக்கொண்டு பாதிப் பூசைத் தொழில் பயப்பாடின்றி வறிதே செய்திளைக்கின்றீர். ஆதியாதாரசத்தி, ஆயதூபாதியளித்து, என்னும் ஞான பூசாவிதியின் தாற்பரியம்பற்றியாகிலும் அறிந்துகொள்ள மாட்டிலீர்) என 13, 14-வது செய்யுட்களை எடுத்துக்கா ட்டிச் செல்லுகின்றனர் காண்க.—(வர்ணுசிரம சந்திரிகை)

மூன்ருவது ஞானதீக்ஷாவிதி. இது எட்டுச்செய்யுட் களையுடையது. எமது வெள்ளியம்பலவாணமுனிவர்பெரு மான் மன்னுபல பிறவி யென்பதுமுதல் இத்திறத்திற் சிவ போகம் என்பதீருய் ஒன்பது செய்யுளும், சாம்பவி தீட் சாவிதி உமாபதிசிவாசாரியர் கூறியவற்றை ஈண்டெடுத்த தென்க. அவற்றுள் இறுதி ஒன்றும் ஞானுவரணவிளக் கம் என்றுகூறி வாதுளோத்தரம், காமிகம், முதலியவற்றி னின்றும் மூலாகமப் பிரமாணமெடுத்துக்காட்டிச் செல்லு கின்றனர்.

நான்காவது ஞானுந்தியேட்டி. இரண்டு செய்யுட் களாலாயது. இது இருகத்தராகிய ஞானிகட்கு விதித்தது எனக்காட்டி ஞானுவரணவிளக்கத்தில் ‘இந்தநெறி இரு திகட்கு விதித்தபடி துறந்தோர்க் கியம்பின வடக்கிரியை’

என்பது முதல் ஏழு செய்யுளும் துறவிகளாயுள்ள ஞானி கட்குரிய சமாதிக்கிரியை கூறுகின்றன என்று கூறுகின்ற னர் முனிவர் பெருமான்.

ஐந்தாவது போசனவிதி. நான்கு செய்யுட்களால் ஆயது. ஞானி பிட்சையேற்றல், நிவேதித்தருந்தல், அரு ந்தியபின் அடைக்காய் சுக்காதியருந்தல், நிட்டையெய்தல் இவற்றைக்கூறி ஞானசரிதமிது மெய்கண்டான் சந்தான த்தே யென நூலை முடித்தருளினர் உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.

இந்நூலாசிரியராகிய உமாபதி சிவாசாரியர் சரிதம் வடமொழியில் பார்த்தவன மாகாத்மியத்திலும், தமிழில் சந்தானசாரியர் புராணசங்கிரகத்திலுங் காண்க.

இன்னும் இந்நூலை எடுத்தாண்டவர்கள் மதுரைச் சிவப்பிரகாசர் முதற்பலர்.

இந்நூல் எம்மையுடையாராகிய மெய்கண்ட சந் தானமெஞ்ஞானிகளால் இதுவரையும் பொன்போற்பொ திந்து போற்றி அனுட்டித்துவரப்பெற்றது.

எமது தருமை ஆதீனத்தில் கிரியாபாதத்திற்கு வடமொழியிற் சோமசம்புசிவாசாரிய பத்ததியும் தமிழில் கமலை ஞானப்பிரகாசர் அகவலும்போல ஞானபாதத்திற்கு வடமொழியில் வாதுளாகமமும் தமிழில் இந்நூலும் அனு ட்டானத்துள்ளன.

ஞானாவரணவிளக்கம் முற்றிலுங் கிடைத்தபின் இந் நூலைப்பற்றிய விடயம் பல புலனும் என்பது திண்ணம்.

இந்நூலை இரகசியத்து வைத்திருத்தல் வேண்டு மென யான் வற்புறுத்தியும் ஞானதானவள்ளலும், எனது ஞானாசிரியருமாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமி

கள் நூலை அச்சிட்டு விடுவதால் ஒன்றுமில்லை, ஒரு ஞானாசாரியன்பாலுபதேசம் பெற்றனுட்டித்தாலல்லது இந்நூல் பயன் தராது, ஸ்ரீபஞ்சாக்கரத்தை எடுத்தோதாத சைவத் திருமுறைகளுண்டா, அதனை உபதேசமுறையின்றி ஓதிப் பயன் பெற்றாருளரோ ஆதலால் நூலை அச்சிட்டுவிட்டா லழியாதிருக்குமல்லவா என ஆக்ஞாபித்தருளினார்கள்.

எனது சிற்றறிவையும், மகாசந்நிதானத்தினது பெரு நோக்கத்தையுங் கண்டு வியப்புற்ற யான் சந்நிதானத்தினது ஆக்ஞைப்படியே நூலிற்கு ஒரு சிறிய குறிப்புரை எழுதியும், ஞானபூசை, ஞானதீட்சைக்கு மூலாகமங்களினின்று பிரமாணங்களைத் திரட்டியும் இதற்கு அனுபந்தமாகச் சேர்த்து இந்நூலை வெளியிடுகின்றேன். இத்தகைய முயற்சியில் என்னை ஊக்கிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகளுக்கு யான் என்றும் நன்றி பாராட்டுவதற்கு உரியேன்.

இவ்வருமை பெருமை வாய்ந்த சைவநூலை அச்சிடுவித்துப் பூர்த்தி செய்து உதவி இதுபோன்ற சமய சம்பிரதாய நூல்களைத் தங்களது முன்னோர்கள் போன்றே அயர்விலா ஊக்கத்தோடு அச்சிட்டு உதவவேண்டும் என்பதையே திருவுளங்கொண்டு நடாத்திவருகின்ற திருக்கயிலாய பரம்பரைத்தருமபுர ஆதீனத்து 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய வர்ய சுவாமிகள் அவர்ளுக்கு நம் தண்டமிழுலகம் மிக்க கடமைப்பட்டிருக்கின்றது.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

சீகாழி,
1—1—34.

வித்துவான்
சட்டைநாதத்தம்பிரான்.



திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனம்
24-வது மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து

[illegible] விதானம்

[illegible] ஞானசாரியவர்ய

[illegible] சுவாமிகள்

[illegible] என்னும் ஞானசரிதையை

[illegible] பிரசுரஞ்செய்து

[illegible] விளங்குகின்ற

[illegible] :—

[illegible] திருச் செங்கா லன்னம் [illegible]
[illegible] தம் [illegible] கமலர் [illegible]
[illegible] [illegible] மர்ந்த மடவோடயார்
[illegible] காட்சி சாலுந் தருமபுரம்.

[illegible] வோன் பாவை யவாசிக்கண்
[illegible] வும் ஞான மடாலயத்து
[illegible] திருமுடிமீது
[illegible] சாமி நாதர் வயங்குவரால்.

[illegible] யோக நயந்திடற்குச்
[illegible] யென னுஞ் [illegible]
[illegible] யும் [illegible]
[illegible]

[illegible] என னும் ஞானச் [illegible]
[illegible] யோக [illegible]
[illegible] பல்லாண் [illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

17-வது மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து
௨௪-வது மஹாசன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானாசாரியவர்ய
பரமாசாரிய ஸ்வாமிகள்

ஞானசார சாஸ்திர பஞ்சகம் என்னும் ஞானசரிதையை

அச்சிடுவித்துப் பிரசுரஞ்செய்து
சிவஞானதானவள்ளலாக விளங்குகின்ற

விபவத்தை வியந்தது :—

க. திருவார் கமலச் செழுந்தடத்துச் செங்கா லன்னம் புடைபெயர்ந்து
மருவார் குழல்சேர் மடவார்தம் வதன கமலந் தமைக்காணா
வுருவார் சேக்கை யென வியப்பா லுயர வமர்ந்து மடநடையார்
கருவார் மருட்சி யடைந்திடுமெக் காட்சி சாலுந் தருமபுரம்.

உ. கங்கை நதியிற் சதமடங்காங் கவேரன் பாவை யவாசிக்கண்
மங்கை பாகன் குருவாகி மருவும் ஞான மடாலயத்து
நங்கள் பரமா சாரியராய் நான்கா றுகுந் திருமுடியிற்
றங்கமுறழுஞ் சண்முகப்பேர் சாமி நாதர் வயங்குவரால்.

ங. அந்த ஞான குருபரர்தா மகில லோக முய்ந்திடற்குச்
சந்த மருவுஞ் சிவஞான சரிதை யென்னுஞ் சிவாசாரப்
புங்க கலைநூ லச்சிட்டுப் புரியும் ஞான தானத்தைத்
துங்க முனிவர் குழாத்தினவர் சூழ்ந்து குலவி வழுத்துவரால்.

ச. ஞான தான வளத்தினராய் நண்ணும் ஞானச் சரக்கறைசேர்
மோன ஞான முரசறைய முன்னும் யோக நிலையினராய்ப்
பானு வென்னத் திகழ்ந்திலகிப் பல்லாண் டிசைகொள் பிரதாப
மான சீர்த்தி பெற்றடியே னானந் தாதி சயமுறவே.

ரு. ஆட்சி செய்து திருமடத்தி லமர்ந்து மேன்மைச் சிறப்பமைய
மாட்சி சாலும் மகத்துவபூ மன்னாய் வாழ்ந்து தமைப்பரவி
நீட்சி மல்கி நெடுங்கால நியதிப் பலன்க ளுலகடையக்
காட்சி விளங்க வள்ளலிவர் கமல பாத மிறைஞ்சுதுமே.

ப. அ. முத்துக்கண்டசாமிப்பிள்ளை.

குருபாதம்.

தருமபுர ஆதீன வித்துவசிகாமணி

ஸ்ரீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை

அவர்கள் இயற்றிய

சிறப்புப்பாயிரம்



மகா ஸந்நிதானம் அவர்களின் பிரபாவம்



அவரென விவரென வுவரென வாங்கே
யருமறை யந்தமு நாடருஞ் சிவமே
எவரென விளங்குமக் குகனெனத் தோன்றி
எழிலுறு தருமையிற் குருபா ளுகி
இவரொளிச் சைவசித் தாந்தத்தி னுண்மை
எமக்கருள் பரமனே யாரென வினவின்
தவர்பலர் சூழ்முனி வோர்கணம் போற்றுஞ்
சண்முக ஞானசம் பந்தநற் குருவே. (க)

இந்நூற்குக் குறிப்புரை வரைந்த தம்பிரான்சுவாமிகளின் பிரபாவம்

காரணன் பூஜாதி காரணந் தனக்குக்
குறிப்புரை யருளிய கொற்றவர் மகிமை


அவர்தாமே யனைத்துலகு மனைத்துடனு மாக்குவிப்பார்
அவர்தாமே யளித்தவற்றை யவைதீரப் போக்குவிப்பார்
அவர்தாமே உயிரவைக ளவைகாக்கு மியலாளர்
அவர்தாமே யிவையிற்றை யன்பார வருளாளர் (உ)

இவர்தாமே யாரணத்தி னியல்பறிந்த விசையாளர்
இவர்தாமே ஆகமத்தி னின்னமுத மாகவுளார்
இவர்தாமே தருமபுரத் தியல்டியார் குழாத்தமர்வார்
இவர்தாமே காழிநக ரேத்தவரு முதலாவார் (௩)

உவர்தாமே யென்முடிக்க ணுவந்தியலும் பெருமானார்
உவர்தாமே யெனதகத்தி னூற்றமிகுந் திருவடியார்
உவர்தாமே யென்கவிக்கிங் கோங்குமெழுத் தளித்துள்ளார்
உவர்தாமே சட்டைநா தப்பெயர்கொ ளுத்தமனார் (௪)

எவர்தாமே மாசந்நி தானத்தின் மொழியுணர்வார்
எவர்தாமே உமாபதியார் ஏற்றமறிந் துரைதந்தார்
எவர்தாமே பூஜாதி கரணநிலை ஏழுத்தாளர்
எவர்தாமே சாதனமு மிதன்பயனு மெனவமைவார் (௫)

யாவர்தாம் என்பொருளு மென்சொல்லு மாவாரே
யாவர்தாம் கட்டளைதந் தென்னைப்புரக்குங் கட்டளையார்
யாவர்தாம் முனிவரரில் ஏற்றத்தாற் புகழுடையார்
யாவர்தாம் அவரடியை யானென்று மிறைஞ்சுவனே (௬)





சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஞானபூசாகாரணம்.



திகழ்சிவப் பிரகா சத்திற் றிருந்திய வகையா லுண்
மை, நிகழ்பவ ருடற்செய் கன்ம நேரிடு மளவு முன்போற்,
றகவினை புரியார் துய்ப்புந் தவிர்தாா தனுவெ டுத்த, வக
மென மருவி யாவு மாற்றுமா சாற்ற லுற்றும். க

க. குறிப்புரை. உண்மை நிகழ்பவர் – உண்மை யதிகாரத்திற் கூறிய ஞானவழியிற் சரிப்போர். உடற்செய் கன்ம நேரிடு மளவும் - எடுத்த வுடலிற் றுய்க்கப்படும் பிராரத்த கன்மம் முற்றுப் பெறுமளவும். நேரிடல் - ஈண்டு முற்றுப்பெறல். முன்போல் - உண்மை நிகழ்வதற்கு முன்போல. தக - விருப்பு வெறுப்பிற்குப் பொருந்த. துய்ப்பந் தவிர்தாா - சுகதுக்கானுபவங்களும் நீங்கா. தனு எடுத்த அகமென - உடலைத் தான் விரும்பி எடுத்துக்கொண்ட வீடுபோல. 'இந்த வுடல் எடுத்த வீடு' ஞானபூசை, செ. அ. யாவும் - ஞானத்திற் சரியை யாதி யாவும். இச் செய்யுள் சிவ ஞானிகளின் தன்மையும், அவர்கள் சரியையாதிகளை யனுட்டிக்கு முறைமையைக் கூறுகின்றா மென்பதூங் கூறுகின்றது.

அன்புறு தொண்டர் யோக ரர்ச்சனை யோர்கள் பூசை, முன்புறு தொழிலோ ரேது முயல்விலோர் முதிர்ந்த பாகத், *தின்புறு ஞான வாய்மை யெய்தின்முற் செய்தி யாவும், பின்செய வுளதேன் னென்றிப் பெற்றி யாய் வுற்றும் யாமே. உ

*தின்பமர் என்றும் பாடம்.

ஞானிகள் சந்தி யென்று ஞானிகள் பூசை யென்று, மானவஞ் செழுத்தாற் செய்க வங்ககர நியாத மென்று, மீனமி லகம்பு றங்க ளியாவுமா மென்று ஞான, நூனவின் றனகண் டாய்வா னுடங்குளந் துடங்கிற் றன்றே. ௩

உ. கு—ரை. அன்புறு தொண்டர் - ஞானிகள். அன்பு ஈண்டு சிவம் என்னும் பொருளது. பூசை முன்புறு தொழிலோர் - சரியா மார்க்கத்துள்ளோர். ஏது முயல்விலோர் - சரியை யாதிகளை இப்பவ மொழிந்த முற்பாலியற்றிய சாங்குசித்தர். இந்நூல் செ. அ. சாங்குசித்தர்—சாம்சித்தர் என்னும் வடமொழித் திரிபு. இன்புறு ஞானவாய்மை யெய்தின் - சிவானந்தானுபவமாகிய ஞானச்செய்கை கைவரப் பெறின். பின் செய வுளதேன்- பின்னர்ச் செய்வானேன். யாம் ஆய்வுற்றும் எனமுடிக்க.

௩. கு—ரை. என்றும் - எக்காலத்தும். ஆன - ஞான வாய்மைக்குரியதான. அங்ககர நியாதம் - அங்க நியாசம், கரநியாசம். அகம் புறங்கள் - சூக்குமதேகசுத்தி தூலதேகசுத்தி. யாவும் ஆம் - இவைகள் யாவும் முற்கூறிய பஞ்சாக்கரத்தாற் செய்தற் குரியவாம்.

* "அஞ்செழுத்தா லான்மாவை யரனுடைய பரிசு
மரனுருவ மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்ககர நியாசம் பண்ணி
யான்மாவி னஞ்செழுத்தா லிதயத் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியி னனலை யோம்பி
யணைவரிய கோதண்ட மணைந்தருளின் வழியின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்க
னணையாவம் போற்றுன்று மான்மாவி லரனே."

* சிவ. சித். சூ. ௯, செ. அ.

மன்னிய கன்ம காண்ட மருவரு ஞான காண்ட, மென் னவே றிரண்டு மென்ப ரிரண்டுமொன் றென்ப ரொன்றை, யுன்னரு முபாய மொன்ற *துபாயமுற் றொழிந்தோ மென்பா, ரன்னதும் புரிவோ மென்பா ராயின ரளவி லார்கள். ௪

*துபய என்றும் பாடம்.

என்றிவை யாவுந் தேர்வுற் றிறைவன தருளே யுன் னிச், சென்றுள நாயன் மார்தந் திகழ்திரு நெறியைச் சேர்ந்து, நின்றது நின்று மீள நிகழ்சிவ தன்ம ஞான, மன் றிது வென்று ரென்றின் றதனையாய் வுற்ற தன்றே. ௫

௪. து—ரை. வேறிரண்டு மென்பர் - இரண்டும் வேறு வேறு என்பர். ஒன்றை - கன்ம காண்டத்தை. உபாய முற்றொழி ந்தோ மென்பார் - ஞானத்தையுற்று உபாயமாகிய கன்மத்தை நீங் கினோம் என்பார். அன்னதும் புரிவோ மென்பார் - அக் கன்ம காண்டத்தையும் அனுட்டிப்போமென்று சொல்லுவர். உபாயம் - சாதனமாகிய சரியை கிரியாயோகங்கள்.

௫. து—ரை. இவை யாவும் - அவர்கள் சொல்கின்ற யாவும்; கன்மகாண்ட ஞானகாண்டங்கள் யாவும் எனினுமாம். நாயன்மார்தம் - சமயாசாரியர் சந்தானாசாரியர்களுடைய. திரு நெறியை - சன்மார்க்கத்தை. "திருநெறிய தமிழ்."

சம். தே. பிரமபுரம், செ. கக.

நின்று மீள - நிட்டை கலைய. நிகழ் - அவ்விடத்து முற் செய் வாசனையாற் செய்கின்ற. சிவதன்மம் - ஞானத்திற் சரியை யாதிகள். ஞான மன்றிது - இது ஞானமல்ல. இன்று - இப் பொழுது. அதனை - அச்சிவதன்மமும் ஞான நிலையே யாம் படியை. ஆய்வுற்றது - ஆராயத் தொடங்கியது. *பின் செய வுளதேனென்றிப் பெற்றியாய்வுற்றும் யாமே என்றார் முன்னும்.

* இந்நூல் செ. உ.

திருநெறி யருளே கண்ணாச் சென்னெறி சிவதன்
மத்திற், றருநெறி யருள்பொ ருந்தச் சத்தவிற் பத்தி
பண்ணி, யொருநெறி யாக்க லாதிங் குறுநெறி யொழிந்து
சைவப், பெருநெறிப் பிணக்கி லாத பிரானெறிப் பின்செல்
வாமே. ௬

அந்தண ராச ராதிக் கருமறைத் தொழில்வே றாகி,
வந்தவர் சரியை யாதி வளர்சதுர்ப் பாத மாகத், தந்தனர்
திரிப தார்த்தந் தானொரு பொருளா *கத்தான், முந்திய
பாத நான்கு முறையினாற் றுறையி னுமே. ௭

* காதான் என்றும் பாடம்.

---

௬. கு—ரை. திருநெறி யருளே கண்ணாச்சென்னெறி-சன்மார்க்க ஞானமாகிய சிவசத்தியே கண்ணாகச் செல்லும் சிவானந் தானுபவமும். சிவதன்மத்திற் றருநெறி யருள் - ஞானத்திற் சரியையாதிகளாற் றரப்படுகின்ற சிவஞானமும். பொருந்த - ஒன்றாக விருக்க, (அதனை யறியாது) சத்தவிற்பத்தி பண்ணி—கன்மமென்றும் ஞானமென்றும் பதப்பொருளைமட்டுங் கருதி. ஒருநெறி யாக்க லாதிங் குறுநெறி - ஒன்றுபடுத்தி யறியமுடியாதபேத ஞானத்தை. சைவப் பெருநெறிப் பிணக்கிலாத பிரானெறிப் பின்செல்வாமே - எந்நெறியுந் தன்னெறியாக் கொண்டதும் பேதப்படாததுமான சைவநெறியாகிய சன்மார்க்கத்தைப் பின்பற்றுவாம். "பெருநெறிய பிரமாபுரம்." சம். தே. பிரமபுரம், கக. "பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்," திருவாசகம், திருக்கழுக்குன்றப் பதிகம், செ. க.

௭. கு—ரை. அந்தண ராச ராதிக்கு - அந்தணர் அரசர் வணிகர்க்கு. அருமறைத் தொழில் - வைதிக சந்தி பூசைகளும். வேறாகி வந்தவர் - அம்மூவருட் பரிபாக விசேடத்தாற் சிவ தீக்கை பெற்றார்க்கும் நான்காம் வருணத்தா ராதியர்க்கும். சரியை யாதி வளர்சதுர்ப் பாத மாகத் தந்தனர்—சரியையாதி நான்கு பாதமாகச் சைவசந்தி பூசையாதிகளும் பதிவர்க்கக் குரவராகிய சதாசிவாதி மூர்த்திகள் தந்தனர். முறையினாற் றுறையி னுமே - சரியையாதி நான்கும் முறையே ஒன்றன்பின் னொன்றாக வழிபோலாகும்.

முற்பவ மெவற்று முற்று முதுதவ வலியாற் சைவத்,
தப்பருஞ் சரியை யாதி சரித்தருள் சார்வ ரன்றிச், செப்
பிய தொழில்செய் யாதே திருவருள் சேர்வோ ருண்டே,
லிப்பவ மொழிந்த முற்பா லியற்றின ரென்ன லாமே. அ

செய்விடிற் பழுதா மென்ற பூசைக டவஞ்செ பாதி,
யெவ்விடத் தினுநி றைந்த விறைவுனே டிவன மூந்து. மவ்
விடத் தில்லை யென்ற தத்தனை யன்றி ஞானி, கைவிடக்
கடவனென்ற கருத்துநூல் விரித்தி டாவே. கூ

அ. து—ரை. முற்பவ மெவற்று முற்று முதுதவ வலி
யால் என்றது:—

“ புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.”

சிவ. சித். சு. அ, செ. கக.

செப்பிய தொழில் செய்யாதே திருவருள் சேர்ந்தவர் திரு
ஞானசம்பந்தர், மெய்கண்டார், பட்டினத்தடிகள் முதலியோர்.

கூ. து—ரை. செய் விடிற் பழுதாம் – நீ செய்வாயாக விட்
டாற் குற்றமாம். இறைவனே டிவனமூந்து மவ்விடத்து, நிட்டை
யெய்திய காலத்து. இல்லை யென்றது - உறங்கியவன் கைப்பொ
ருள்போல் தானே நீங்குமென்றது.

‘ குறிப்பிடங் காலந் திக்கா சனங்கொள்கை குலங்கு ணஞ்சீர்
சிறப்புறு விரதஞ் சீலந் தபஞ்செபந் தியான மெல்லா
மறுத்தற வொழிதல் செய்தன் மருவிடா மன்னு செய்தி
யுறக்குறு பவர்போல் வாய்மை யொழிந்தவை யொழிந்துபோமே.’

சிவப்பிரகாசம் செ. கூச.

போகிகா ரணமா மேனி புண்ணியன் கொண்டா னென்
ன்று, லூகியா முத்தி காமு மொழியவு முரிய ரென்னுந்,
தேகியா யழைப்ப தந்தச் சிற்பரம் பொருளை யென்ப, ரா
கையா லாகம் யாவு மவர்கள தாகு மன்றே. க0

அண்ண லு மனேக மேனி யானபி னென்றிற் பூசை,
பண்ணின னென்று லல்லா தவையவன் பழித்தா னோமோ,
நண்ணிய வளவை காட்சி நாட்டமா னதந்தான் ஞானக்,
கண்ணினை யுதவு மென்றுற் கடவுளை விடய மாக்கே. கக

க0. கருத்துரை. சிற் சொரூபத்தையுடைய பதி போக காமி மோட்ச காமியாகிய இருவகையோர் பொருட்டுந் திருமேனி கொள்வன் என்க.

"போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரா
ருகியா மூட ரெல்லா மும்பரி லொருவ னென்பர்."

சிவ. சித். சூ. க, செ. ருo.

கக. கருத்துரை. மோட்சகாமி தட்சிணாமூர்த்தியாதிகளையும் போககாமி சோமாஸ்கந்தராதிகளையும் பூசிப்பதால் மற்றையமூர்த்தங்களை யிகழ்ந்தனர் அல்லர் என்க.

இந்திரியப் பிரத்தியட்சத்திற்கும், மானதப் பிரத்தியட்சத்திற்குங் கடவுளை விடய மாக்குவாயாக என்றபடி. அளவை காட்சி என்பதைக் காட்சி யளவை யெனவும், நாட்டமானத மென்பதை மானத நாட்ட மெனவுங் கூட்டி இரண்டிடத்தும் நான்கனுருபு விரிக்க. அப்படிக் காண்பது *"அவனருளே கண்ணா" கக்காணு மவசரத் தென்க.

*அப்பர் தேவா. மைப்படிந்த, வினைவிடைத் திருத்தாண்டகம் செ. க0. பொது.

"இந்நிலைதா னில்லையே யெல்லா மீச
னிடத்தினினு மீசனெல்லா விடத்தினினு நின்ற
வந்நிலையை யறிந்தந்தக் கரணங்க ளடக்கி
யறிவதொரு குறிகுருவி னருளினா லறிந்து
மன்னுசிவன் றனையடைந்து நின்றவன்ற னாலே
மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னியசாக் கிரமதனிற் றுரியா தீதந்
தோன்றமுயல் சிவானுபவஞ் சுவானுபூ திகமாம்."

சிவ. சித். சூ. அ, செ. ௩௪.

கன்னலின் சுவையை நச்சுங் கருத்தின ரும்ப ரே னுந், தன்னுரு வொழியக் கொள்ளுந் தகைமைய தன்று மென்றாற், பன்னரு முணர்வை யாசைப் படுபவர் பற்றற் றானுந், தன்னுரு வொழியக் கொள்ளுந் தகைமைய தன்று மன்றே. கஉ

எவ்வுல கத்து மூர்த்தி யேதுகொண் டிவனி யங்கு, மவ்வுல கத்து மேனி யதுகொண்டங் கமரு மீசன், செவ் விய தூல சூக்க பரமெனத் திகழ்ப வற்றி, லொவ்விரு பர மொன் றாதே லொழிந்தவை யொழிந்தி டாவே. கங

கஉ. கு—ரை. தன்னுரு - முன்னையது கரும்பின் கோ தோடு கூடிய வடிவம். பின்னையது பதியின் தூல சூக்க பரவடி வம். கருப்பஞ்சாற்றை விரும்பினோர் தேவரானாலும் கோதோடு கூடிய கரும்பினின்றும் சாற்றைப் பெறுவதல்லது தனியே சாற் றை யடைய முடியாததுபோல ஞானி பற்றற்றவனானாலும் பரசிவ த்தை மூர்த்திபண்ணியல்லது சிவானந்தானுபவம் பெறுதல் எலா தென்க.

பன்னரு முணர்வு—சிவானந்தம்.

கங. கு—ரை. எவ்வுலகத்து மூர்த்தி யேதுகொண்டு-எந்த உலகத்துள்ள எந்த மூர்த்தியாகப் பதியை யுளத்திற் கொண்டு. இவன்-தியானிப்போன். இயங்கும்-தியான நெறியிற் செல்வன்.

"யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்."

சிவ. சித். சூ. உ, செ. ௫0.

தூல சூக்க பரம் என்ற மூன்றும் சிவத்திற்கு மான்மாவிற் கும் கொள்க. ஒவ்விரு பரம் - சிவபரமும் ஆன்மபரமும். ஒன் றாதேல் - அனனிய மாகா விடின். ஒழிந்தவை - தூல சூக்குமங் கள். பரம் - இச்சா ஞானக்கிரியையோடு கூடிய் பொருள் சாத் திரையாக இருக்கும் நிலை.

நிறைந்துயிர்க் குணர்வாய் நின்ற நிலையுறின் ஞான பூசை, யுறைந்தசோ ரொளிய தாக்கி யொடுங்கிடின் யோக பூசை, யறைந்தவை மூர்த்தி சேர்க்கி லந்தரி யாக பூசை, புறந்திக ழிலக்கின் மூன்றும் பெறிற்புறப் பூசையாமே. கச

இதுவிதி யென்ற றிந்து மிதுவல்ல திதனி னுள்ள, ததுகொளக் கடவோ மென்றென் றர்ச்சனை செய்வோ ரங் கைப், பொதிதரு திரளை விட்டுப் புறங்கைநீ ரிறங்க நக்கும், மதியின ரென்று லென்னுன் மாற்றமிங் காற்ற லாமே. கரு

கச. கு—ரை. ஞானி யோகி கிரியாவான் முறையே அறி விற் கறிவாகவும், அறிவில் ஒளியாகவும், அறிவில் மூர்த்தியாக வும் தியானிப்பர்.

> "என்னை யறிவென்று னென்னறிவி லானந்தம்
> தன்னைச் சிவமென்றான்."
>
> சிவபோகசாரம் செ. உகூ.

இலக்கில்—குறியில்.

> "அறிவதொரு குறிகுருவி னருளினு லறிந்து."
>
> சிவ. சித். சூ. அ, செ. நச.

மூன்றும்—உணர்வும், ஒளியும், மூர்த்தியும்.

கரு. கு—ரை. இவ்வாறு உணர்வொளி மூர்த்தி மூன்றை யும் குறியிலாக்க அறியாது புறப்பூசை செய்வோர், அங்கையி லுள்ள நீர்த்திரளைவிட்டுப் புறங்கையில் வழிவதை நக்குவோர்க் கொப்பர். அவர்க்கு யாம் பதில் சொல்லக் கூடுமோ? மாற்றம் - மறுத்துரை. இங்கு - இவ்வறிவிலிகளிடத்து.

ஏகாரம்—வினு.

ஆருயிர்ச் சிவத்தை விட்டுப் புறச்சிவ மர்ச்சிப் பா
னென், நீருயிர்ச் சிவமுண் டாகி *விசைந்தன ரெங்கு
முள்ள, தோருயிர்ச் சிவமே மற்றுப் புறச்சிவ §முருச்சி
வந்தான், பேருயிர்ச் சிவமி தென்னிற் பெறாதுருப் பிண
ங்கு நூலே. ௧௬

* விசைந்தன்றெங்கு என்றும் பாடம்.
§ முருச்சிவத்தின் என்றும் பாடம்.

காத்தரு ளும்பர் மேனி காட்டபா டாண மென்று,
நாத்திக முறையார் நல்லோர் நாதனு மும்பர் மூர்த்தி,
பார்த்திவ மிவற்றி னின்னே பண்ணுமென் றளித்த பண்
பா, லேத்துவோர்க் கடையா ளத்தோ டியற்றிய வென்ன
லாமே. ௧௭

௧௬. த—ரை. ஆருயிர்ச் சிவத்தை - உயிர்க் குணர்வாகிய
சிவத்தை. ஈருயிர்ச் சிவமுண்டாகி விசைந்தனர் என்பதை,
ஈருயிர்ச்சிவ மிசைந்தனர் உண்டாகில் எனக் கூட்டுக. புறச்
சிவம் - புறக்குறியி லுள்ள சிவம். பெறாதுரு—உருவத்தை யடை
யாது. பிணங்கு நூல் - அகண்டாகார சச்சிதானந்த வியாபகம்
கூறும் சிவாகமங்களோடு மாறுபடும்.

இச்செய்யுள் பூர்வபட்சம். மேல்வருவது சித்தாந்தம்.

௧௭. த—ரை. உம்பர்மேனி - புறக்குறியாகிய சிவனது
திவ்வியத் திருமேனி. காட்ட பாடாண மென்று - மரமென்றுங்
கல்லென்றும். நல்லோர் நாத்திக முறையார் எனக் கூட்டுக.
பார்த்திவ மிவற்றில் - பிருதிவி சம்பந்தமான இவ்வடிவங்களில்.
பண்ணும் - தோன்றுவிப்பன். அளித்த - சிவாகமங்கள் அருளின.
காரணுதிகள் - சாதகர்களின் குறிப்பின் பொருட்டாம்.

“ அகம்புற மென்றி ரண்டா லர்ச்சனை புரியு மிந்தச் சகந்த
னில்.”

சிவப்பிரகாசம் செ. ௬௫.

மற்றிவை ஞானி காணு னென்பது நனவோன் வாழ்வு, பற்றிய கனவோன் காணு னென்பது பழுதோ பண்டைக், குற்றமோ கைவிட் டானோ கோளிலி யிலனோ கூடி, யற்றது மிவற்றி லொன்றோ டல்லவோ சொல்லி டீரே. ௧அ

௧அ. கு—ரை. இவை - ஒளியு மூர்த்தியும் புறக்குறியுமாகிய இவை. நனவோன் வாழ்வு - சாக்கிராவஸ்தையிலுள்ள அன்னியனுடைய சுகதுக்கானுபவங்களே. பற்றிய கனவோன் - கனவைப்பற்றியவன் அதாவது சொப்பனவஸ்தையிலுள்ள ஒருவன் என்க. காணுனென்பது - காணுனென்று சொல்லுதல். காணுனென்பது - காணுன் என்று சொல்லுதல் போலாகும். பழுதோ - ஆதலால் அது குற்றமா? கைவிட்டானோ - புறக்குறியும் ஒளிமூர்த்தியும் ஒளியும் உயிரிலுணர்வுமாகிய நான்கில் சாதகனொருவன் கீழ்க்கீழ் நிலையினின்றும் மேன்மேனிலையை யடையில் அக்கீழ் நிலையைக் கைவிட்டவனுவனு. கோளிலியிலனோ - ஞானி புறக்குறிமுதலிய மூன்றின் தியானத்தை விட்டவனுயினும் குற்றமற்றவனல்லவா? கூடி யற்றதும் - குறியோடு கூடித் தன்னை யிழந்ததும். இவற்றி லொன்றோடல்லவோ - முற் கூறிய ஒளிமுதலியவற்றி லொன்றிலல்லவா.

"அறிவரியான் றனையறிய வாக்கை யாக்கி
யங்கங்கே யுயிர்க்குயிரா யறிவுகொடுத் தருளாற்
செறிதலினுற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
சிவோகம்பா விக்குமத்தாற் சிவனு மாவர்
குறியதனு லிதயத்தே யானைக் கூடுங்
கொள்கையினு-லானவர் குறியொடுதா மழியு
நெறியதனுற் சிவமேயாய் நின்றிடுவ ரென்று
னேசத்தாற் றொழுதிடுநீ பாசத்தார் விடவே."

சிவ. சித். சூ. ௧௨, செ. ௩.

புரையற வுணர்வா யெங்கும் புண்ணிய னின்று
னென்று, லருளுரு வல்லா தில்லை யாயினு மடையா ளத்
தாற், பரனிவ னென்போர்க் கந்தப் பார்த்திவ வுருவே
ஞான, வுருவென வுருகி மெய்ந்நின் றுவந்தருள் செய்யு
மன்றே. ௧௯

தீர்த்தனை யுளத்து நின்ற சிவனைவிட் டுலகிற் றீர்த்த,
நீர்த்தடந் தோய்வோ ராகி நீங்கிய வுடல்கொண் டாடு,
மாத்திர மதியோர் நீரின் மண்ணிலோர் வரிசை வைத்த,
சாத்திர முயிரில் வைத்த சரதமோ தவிர்வ தின்றே. ௨௦

---

௧௯. கு—ரை. புரையற - பசுஞான பாசஞான விகற்பமற. ஞானவுருவென-உயிர்க்குணர்வாகிய வுருவென.

"இந்தனத்தி னெரிபாலி னெய்பழத்தி னிரத
மெள்ளின்க ணெண்ணெயும்போ லெங்குமுள னிறைவன்
வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே யருளும்."

சிவ. சித். சூ. ௯, செ. ௧௨.

"திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனெனன் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணாத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவனன் பர்க்கே."

சிவ. சித். சூ. ௧௨, செ. ௪.

௨௦. கு—ரை. உளத்துநின்ற சிவனை - உயிருக்குணர்வாகி நின்ற பரசிவனை. விட்டு - எல்லாமீசன் இடத்தினிலு மீச னெல்லா விடத்தினிலும் நிறைந்த அந்நிலையை யறியாது விட்டு. உடல்கொண்டாடு மாத்திர மதியோர் - உடலைக் கொண்டாடு மவ்வளவினதாகிய அறிவையுடையோர்.

மதுமலைத் தலைய தென்றே வவ்வுவான் வரும்வ
ழிக்க, ணதுபுல ரொருக்கங் கோட்டொன் றமர்தல்கண்
டகல்வோ ரங்கைக், கதிர்மணி யன்றித் தோன்றுங் காச
மா மணிகொள் வார்போ, னதிபதி தேர்வோர் வீடு நண்
ணுமா றெண்ணு வோரே. உக

மறைதரு சடங்கிற் கண்ணல் வன்னியின் மன்னுஞ்
சைவத், துறைதரு தொழிற்கு வித்தியா தேகத்திற்
றோன்றி நிற்கு, மறிகுறி யொழிந்த வற்றி லப்பிர யுத்திக்
கந்தக், குறியுரு மருவு ஞானிக் குயிரினிற் குளிரு
மன்றே. உஉ

உக. கு—ரை. வவ்வுவான் - கவரும் பொருட்டு. அது - அத்தேன்கூடு. எருக்கங் கோட்டொன்று - ஒரு எருக்கங்கோட்டு. காசமாமணி - தாழ்ந்த மணியுள் ஒருவகை. நதி - தீர்த்தம். பதி - க்ஷேத்திரம். தேர்வோர் - தேர்வோராகி.

இப்பாட்டு, பரசிவத்தை மூர்த்தியாதிகளின் வைத்துணர் வதை மறுப்போர்க்கும், எல்லா மீசனிடத்திலு மீச னெல்லா விடத்தினிலும் நிறைந்த அந்நிலையை யறியாது, தீர்த்த தல வழிபாடு செய்வோராகி வீடடைய விரும்புவோர்க்கும் எடுத்துக் காட்டுரைத்தது.

உஉ. கு—ரை. மறைதரு சடங்கிற்கு - வைதிக சடங்கிற்கு. (சடங்கு—கிரியை.) அண்ணல் - சிவன். சைவத் துறைதரு தொழிற்கு - சிவாகம விதிவழிச் செய்யுங் கிரியைக்கு. அறிகுறி யொழிந்தவற்றில் - இவையல்லாத வுருவங்களில். அப்பிர புத்திக்கு - நிச்சய புத்திக்கு. உயிரினிற் குளிரும் - உயிரிற் றங்கி விளங்கும். குளிர்தல் - தங்குதல்.

'நிறைந்துயிர்க் குணர்வாய் நின்ற.'-இந்நூல் செ. கச.
'உளத்து நின்ற சிவனை.'—இந்நூல் செ. உ0.

o

எங்குமாய் நிறைந்த நாத னேத்துவோர் கொண்ட மூர்த்தி, தங்கியே திகழு மங்கி தான்றனிக் காண்பொ ணுதா, லங்கது திடமுண் டென்ப தமையுமே லடைய சுங்கற், செங்கலா முருட்டுத் தீயுந் திண்ணமென் றெண்ண லாமே. உங

ஞானவா ரமுத முண்டார் நயந்தது நுகர்ந்து வாழு, மூனமில் யோகர் செய்தி யொழிவதுண் டாக வுண்டா, மீனமில் தொழில்பி னின்று முண்டெனி லெய்திற் றின்று, மானபின் ஞான யோக மல்லதொன் றறித ராரே. உச

உங. து—ரை. ஏத்துவோர் - தியானிப்போர். மூர்த்தி - ஈண்டு வடிவமென்னும் பொருளது. மூர்த்தியாக வெனினுமாம். தனிக்காண்பொணுது - விறகை விட்டுப் பிரித்துக் காண வொண் ணுது. முருடு - கட்டை.

உச. து—ரை. ஞானவாரமுத முண்டார்க்கும் யோகர்க் கும் செய்தியொழிவதுண்டாக உண்டாம் எனமுடிக்க. செய்தி யொழிவ துண்டாக - கிரியை நீங்க. உண்டாம் - ஞான நிலையே யாம். தொழில் பினின்றும் - ஞானநிலையிற் கிரியை, உறங்கிய வன் கைப்பொருள்போல் தானேயின்றும். உண்டெனில் - கிரி யை நிகழின். எய்திற் றின்றும் - ஞானநிலை யெய்தவில்லையாம் எனவே ஞானயோகமும் கிரியை நீக்கமும் ஒளி பரவலு மிருள் கெடலும் போல ஏககாலத்து நிகழ்வனவென அறிக.

"அகம்புற மென்றி ரண்டா லர்ச்சனை புரியு மிந்தச்
சகந்தனி லிரண்டு மின்றித் தமோமய மாகி யெல்லா
நிகழ்ந்திட மகிழ்ந்து வாழு நீர்மையார் போல ஞானந்
திகழ்ந்தகம் புறமெ ணுத செம்மையார் நன்மை யாரே."

சிவப்பிரகாசம் செ. கூ௫.

கற்றமந் திரமும் வானிற் காலுமெக் காலும் வாக்காற், சொற்றரிற் பலிக்கு மங்கைச் சுழற்றிகொண் டெழுப்பி லாற்று, மற்றிவை போல ஞான யோகிநீ மருவு தாண்மே, லுற்றிடு மளவி லின்ப மொழிந்தவை யொழிந்து போமே. உரு

உரு. த—ரை. கற்ற-சற்குருவினால் உபதேசிக்கப்பெற்ற. வானிற்கால் என்றார் காற்றுமுன்னர்த் தோன்றாது நிற்றற்கும் சுழற்றிகொண் டெழுப்பிற் றோன்றுதற்கும் இடம் வானாதலின். எக்காலும் - மந்திரப் பிரயோசனத்தையோ காற்றையோ விரும் பிய எப்பொழுதேனும். காலம் என்பது அம்கெட்டுக் கால் என நின்றது. "ஞானன் என் புழிப்போல." சிவ. சித். சு. க, செ. சுஉ. சொற்றரில் - செபிக்கில். சுழற்றி - காற்றாடி. ஆற்றும் - உண் டாதலைச் செய்யும். மந்திரம் பலிக்கும். கால் ஆற்றும் என முடிக்க. கால் - காற்று. மருவு - அனனியமாகப்பொருந்திய. தாண் மேலுற்றிடு மளவில் - அரனடியை யுணரும்போது. இன்பம் - சிவானந்தானுபவ மொன்றுமே யாம்.

ஒழிந்தவை - சரியையாதிகளும் பிரபஞ்சமும்.

"பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்
படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பாக்கு
மாசுபடு மலமாயை யருங்கன்ம மனைத்து
மரனடியை யுணரும்போ தகலும்பின் னணுகு
நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கு
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையிதுவே யாகி
யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ
ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்."

சிவ. சித். சு. அ, செ. கக.

அருக்கன் புகுதவிருள் போமடியிற் பொருந்தமலம் போமே.

சிவ. சித். சு. கக, செ. ரு.

கற்பெய ரொப்ப வொப்பக் கறிக்கரை கற்பொ றுத்தோன், விற்புழிப் பயனைச் செய்து மிகுமொளி மணிக்கற் றுங்கும், பொற்பினின் மையதாய் நொய்தாய்ப் பொருளுமெண் ணரிதா மென்று, லற்புத ஞான யோக மார்கொலா தரியா தாரே. உசு

உடற்குண நான்கும் பண்டை யுறுதியிற் செறிதியா யி, னடுத்திகழ் ஞான வாய்மை நழுவிய தென்ப ரன்றி, யடுத்தவை நொய்தி னைய்தி லர்ச்சனை திகளோ நேரா, விடுத்திட லாவ தின்றேன் மெல்வி தின் வல்ல தாற்றே. உஎ

உசு. த—ரை. கற்பெயர் - கல்லென்ற பெயர். ஒப்ப வொப்ப - ஒப்பாக. உலகப் பிரசித்த மென்பார் இருமுறை கூறி னர். அரைகல் - அம்மி. பொறுத்தோன் - விற்கும் பொருட்டுத் தூக்கிச் செல்வோன். பயன் - இலாபம். நொய்து - சிறிது. மணி க்கல் - இரத்தினம். இன்மையதாய் - மனக்களிப்புத் தருவதாய். நொய்தாய் - மிருதுவாய். பொருளும் - அதனாற் பெறும் இலா பமும். எண்ணரிதாம் - அளவில்லதாம்.

இது கன்மயோக ஞானயோகங்களில் தொழில்வன்மை மென்மையும் பயனில் ஏற்றத்தாழ்வுங் கூறியது.

உஎ. த—ரை. உடற்குண நான்கு.— “புழுவுக்குங் குண நான்கெனக் கும்மதே.”

அப்பர் தே. தனிக்குறுந்தொகை செ. ௪.

பண்டை யுறுதியில் - ஞானநிலைக்கு முன்னுள்ள நிலையில். ஞான வாய்மை நழுவியதென்பர் - ஞானநிலை நழுவிற்றென்று அனுமானத்தாற் சொல்வர். ஞானநிலையில் உடற்குண நான்குஞ் செறியாவாகலான். அவை - உடற்குணம் நான்கு. அர்ச்சனாதி கள்—கிரியாமார்க்க பூசையாதிகள். நேரா - செய்தற்கேலா. மெல் விதின் - ஞானத்திற் சரியையாதிகளால். வல்லது - சிவானந்தா னுபவ மாகிய சீவன்முத்தி நிலையை. ஆற்று - செய்துகொள்.

செய்தொழின் முடிந்து மாறாத் திரிகையு மிங்குச் சேர்ந்த, வையமில் கலனும் போல் வருவினை வருவ தாஞற், சைவமுன் புரிந்த மும்மைத் தன்மைவா தனையு ஞான, மெய்தருஞ் சுவடுங் கூடி வருமிது வியப்பு மன்றே. உஅ

உஅ. து—ரை. மாறா - சுற்றுதல் நீங்காத. திரிகை - குயவன் சக்கரம். இங்கு - பெருங்காயம். அருவினை - அனுபவித்தல்லது நீங்காத பிராரத்த கன்மம். சைவம் - சிவாகம வழியில். முன் - ஞானநிலை எய்தற்கு முன். மும்மைத் தன்மை வாதனையும் - சரியை யாதி மூன்றன் பழக்கமும். ஞான மெய் தருஞ் சுவடும் - ஞானத்திலுண்மை யழுத்தமும்.

“ அங்கித்தம் பனைவல்லார்க் கனல்சுடா தாகு
மௌடதமந் திரமுடையார்க் கருவிடங்க ளேறா
வெங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலு ஞானிக்
கிருவினைகள் சென்றணையா முற்செய்வினை யிங்குத்
தங்கிப்போம் பாத்திரமுங் குலாலன்வினை தவிர்ந்த
சக்கரமுங் கந்தித்துச் சுழலு மாபோன்
மங்கிப்போய் வாதனையா லுழல்விக்கு மெல்லா
மலங்களும்பின் காயமொடு மாயு மன்றே.”

சிவ. சித். சூ. கo, செ. சு.

ஞானயோ கக்கிரியை சரியை நாலு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரியன்
ஊனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்
யோகிகிரி யாவான்று ணெண்கிரியை யாதி
ஆனவிரண் டினுக்குரியன் சரியையினி னின்றோன்
அச்சரியைக் கேயுரிய னுதலினு லியார்க்கும்
ஈனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே
ஈசனிவன் றனென்று மிறைஞ்சி யேத்தே.

சிவ. சித். சூ. கஉ, செ. கி.

இன்பினி தென்று வக்கு மிவனவன் றன்னை யப்போ, தன்புறு தொழிலா லூழ்வந் தணைதரு மதனா லாகத், தன் பர வுருவைத் *தாழ்வர் தலத்தவர் தம்மிற் றுஞ்செய், பின்புறு தொழிலா லின்ப முன்பினும் பிறக்கு மன்றே. உக

உக. சூ—ரை. இன்பு - ஞானயோகத்தாலெய்தும் இன்பம். அவன்றன்னை - அந்த ஞானசாதகனை. அப்போது - முற்பிறவி களில். தொழிலால் - செய்கையால். ஊழ் - பிராரத்தகன்மம். ஆகத் தன் பரவுருவை - சரீரத்தில் ஆன்மப் பிரோகனுக ஆசாரி யனால் அறிவிக்கப் பெற்ற பரசிவ வடிவத்தை. தலத்தவர் தம் மின் - உலகத்தவர் போல. பின்புறு தொழிலால் - சிவஙிட்டை கலந்த காலத்துச்செய்யும் ஞானத்திற் சரியையாதிகளால். இன் பம் - சிவானந்தானுபவம். முன்பினும் - முன் னிட்டை கூடிய காலத்துப் பெற்றதினு மதிகமாக. அவன் என்றார் பிராரத்த கன் மத்திற்கு ஞானி வெகுதூரமென்றற்கு அப்போதன் புறுதொழி லால் என்றார் இப்போது செய்யுந் தொழில் வேறுபா டறிவித் தற்கு. பின்பு முன்பு என்பன ஈண்டு காலத்தின் மேலன. பிறத் தல் — வெளிப்பட்டுத் தோன்றுதல்.

"இந்திரிய மெனைப்பற்றி நின்றேயென் வசத்தி
னிசையாதே தன்வசத்தே யெனையீர்ப்ப திவற்றைத்
தந்தவன்ற னணைவழி நின்றிடலா லென்றுந்
தானறிந்திட் டிவற்றினொடுந் தனையுடையான் றன்கண்
வந்தனைசெய் திவற்றின்வலி யருளினால் வாட்டி
வாட்டமின்றி யிருந்திடவும் வருஞ்செயல்க ளுண்டேன்
முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகண்
மூளாவங் காளாகி மீளா னன்றே."

சிவ. சித். சூ. கூ0, செ. ௯.

* தாழ்வன் என்றிருத்தல் வேண்டு. பிரதிகளில் தாழ்வர் என்றே காணப்படுகிறது.

எண்டொகை யுரைப்பித் தோர்போ லியம்பின ரெண்ணி யெண்ணி, மண்டிக மலகு வைத்து மற்றையத் தொகைவ ழாமற், கண்டுளந் தெளிதல் போன்முற் கற்ற சொற் பொருள்க ருத்துட், கொண்டுணர் பவர்க்கி யாவுங் குறிவழி நடத்த லாமே. ௰

ஞானபூசாகாரணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

௰. கு—ரை. எண்தொகை - ஒருபேரெண்ணை. இயம்பின ரெண்ணியெண்ணி - எண்ணி யெண்ணிச் சொல்லி. அலகு வைத்து - அளவு வைத்து. அத்தொகை - அப்பேரெண்டொகை. முற்கற்ற-முன் ஞானசாரியாரால் உபதேசிக்கப் பெற்ற சொற் பொருள் - ஸ்ரீபஞ்சாக்கரப் பொருளை. யாவும் - அகப்புற நிகழ்ச்சிகளியாவும். குறிவழி - ஆசாரியன் காட்டிய குறியின்வழி

"அஞ்செழுத்தா லான்மாவை யானுடைய பரிசு
மானுருவ மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்கர நியாசம் பண்ணி
யான்மாவி னஞ்செழுத்தா லிதயத் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியி னனலை யோம்பி
யணைவரிய கோதண்ட மடைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதி யருக்க
னணையரவம் போற்றோன்று மான்மாவி லானே"

சிவ. சித். சூ, கூ, செ. அ.

ஸ்ரீகுருசரணாரவிந்தாப்பியாம் நம : ||

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

௨. ஞானபூசை.



பணித்தவரு ளுடன்சந்தி பண்ணி னோர்கள் பயில்
காலந் தருசந்தி பகர்வன் கங்குற், புணர்த்தியசூக் குமவுட
லாற் போகந் துய்த்துப் பூதவுடற் போகத்திற் போத
நாத, னுணர்த்தியபோ துணர்ந்துணர்வை யுயிரிற் சந்தித்
தொண்புனலா லுடற்சுத்தி யோங்கு வித்துக், *கணக்
குறுநீ றிடக்கையி னைஞ்செழுத்தாற் குழைத்துக் கலந்
தொருமை திரிமுண்டங் காட்டத் தீட்டே. ௧

* கணக்குட என்றும் பாடம்.

௧. குறிப்புரை. பணித்த - ஆசாரியனால் அனுக்கிரகிக்கப்பட்ட. பெத்தத்தும் முத்தியினும் பிரேரித்து நின்ற எனினும் பொருந்தும். அருளுடன் சந்தி பண்ணினோர்கள் - சிவஞானத்தையடைந்தவர்கள். அருள் - சிவஞானம்.

மருவியிடு முயர்ஞான மிரண்டா மாறு
மலமகல வகலாத மன்னு போதத்
திருவருளொன் றொன்றதனைத் தெளிய வோதுஞ்
சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே.

(என்பது காண்க)

சிவப்பிரகாசம். செ. ௪0.

சந்தி பண்ணுதல் - கூடுதல் காலந்தரு சந்தி - காலத்திற் செய்யப்படுஞ் சந்தியாவந்தனவிதியை. சூக்கும உடலாற் போகந் துய்த்து - நிட்டையெய்தி. நித்திரையெய்தி யெனினும் ஆம். பூதவுடற் போகத்திற் போத - சாக்கிராவத்தை யடைய. ஒண்புனல் - பரமாமிர்தமாகத் தியானித்த தீர்த்தம். கணக்குறு நீறு - ஞானிக்கு விதித்த அளவினதாகிய திருநீற்றை. கலந்தொருமை - ஒருமை கலந்து. சிவோகம் பாவனை செய்து என்பது பொருள். காட்டத்தீட்டு - விளங்கும்படி அணிந்து கொள்வாயாக.

ஆசொழிய வான்மசித்தைச் சுத்தவித்தை பிரியா தறியுநெறி யமர்ந்துசிவ மனுபூதி யாகப், பேசியமுத் தத்துவத்தா னீர்குடித்துச் சுத்தி பெருக்கிநிமிர்ந் திரே சித்துப் பூரித்துப் பிடித்து, மாசகல மானதமா மந்தி ரத்தை யுரைத்து வளர்தார மிருகாமு மன்ன நீவித், தேசமாங் குலிகளினுந் திகழுங்கங் களினுந் திசைமுழுது முடன்முழுது மணிதிரு மந்திரமே. உ

நிலம்புனறீக் கால்வா*னு ணிகழுமிரு சுடரான்மா நிலவிருநான் குருநினைந்தா னிழற்கடவுள் பதமும், கலந்த பர குரவரவ ரிருவகையோர் தாளுங் கருத்தருநற் றேசி க்கன்றன் கழலிணையுங் கருதித், துலங்கிடுமா விளக்கியந்நீர் தெளித்துக் கொண்டு தூநீரா லாசமன சுத்தி செய்து, நலங்கொணியா தம்புரிந்து நாதனிட நணுகி நாட்டமுறச் சூழ்ந்துமுகங் காட்டி டாயே. ௩

* வான்றனி என்றும் பாடம்.

உ. த.—ரை. சுத்தவித்தை - சுத்தவித்தையின் காரியமான சூக்கும வாக்கு. நாதமெனினும் ஆம். மேல் மந்திரங்கள் உச்ச ரிக்கவேண்டுதலின் சுத்தவித்தை பிரியாது என்றார். சிவமனுபூதி யாக அமர்ந்து எனக் கூட்டுக. முத்தத்துவத்தால் - உபதேசக்கிர மத்துள்ள பஞ்சாக்கரத்தை யிறுதியாக உடைய தத்துவ மந்திரங் கள் மூன்றாலும். நீர்குடித்து - ஆசமனம் செய்து. சுத்திபெரு க்கி - அதாசுத்தி தொடுமிடந் தொடுதல் செய்து. பிடித்து - கும் பகஞ் செய்து. மானதமா மந்திரத்தை யுரைத்து - மந்திரத்தை மானதமாகச் செபித்து. தாரமன்ன - பிரணவம் பொருந்த. அணி திருமந்திரம் - ஸ்ரீபஞ்சாக்கரத்தால் அங்கநியாச கரநியாசங்கள் செய்வாயாக.

௩. த.—ரை. நாள்நிகழு மிருசுடர் - சூரிய சந்திரர். இரு நான்குரு - அட்டமூர்த்தி வடிவம். ஆல்நிழற்கடவுள் - தட்சிணா மூர்த்தி. கலந்தபர - பரத்திற் கலந்த. குரவரிருவகையோர் - சம யாசாரியர் சந்தானாசாரியர். கருத்தருநற்றேசிகன் - தனது ஞானா சாரியன். உருநினைந்து, பதமுந் தாளுங் கழலிணையுங் கருதி, விளக்கி எனக் கூட்டுக.

நாதனிடம் - திருக்கோவில். நாட்டமுற - உருக்கோலி மந்தி ரத்தால் நினைந்த ஞானத்தோடு. முகங்காட்டிடாயே - பிரபஞ்ச த்திற் கெதிர்முக மாகாது. சிவனுக் கெதிர்முக மாவாயாக.

இற்புகுந்து பதம்விளக்கி யிருந்து நீறிட் டிலங்கு பிரா ணாயாம *மிருநியாத மெய்தி, யற்கியமோன் றாக்கி யந்நீர் சுத்தி சேர்வித் தண்ணறிரு வடிவிளக்கி யலர்கள் சாத்திச், சிற்பரமாந் தற்பரத்து ளழுந்தி நீங்குந் தீங்ககலத் தூங்கொருமை திரிந்த தாகிற், சொற்பதமா ஞானநூ லோத லாதி தொடங்கவையு மடங்கிலருட் டொழிறு வக்கே. ச

* நியாத என்றும் பாடம்.

நீராடித் தர்ப்பித்திற் புகுந்தி ருந்து நியமஞ்செய் *துயரங்க நியாத மெய்தி, ஆராநற் பாத்தியா சமன மொன்றி லர்க்கியமோன் றினிலமைத்தர்க் கியசெ லத்தாற், சீராருஞ் சன்மார்க்க மான ஞானந் திகழுந்தென் றிசை வாயிற் சுத்தி சேர்வித், தோராருந் துவாரமிது பாரித் தாண்ட வெழிற்குரவ †ரெண்மரையு மிறைஞ்சி டாயே. ரு

* துயிரையங்கர என்றும் பாடம்.
† ரெழுவரையு என்றும் பாடம்.

ச. கு.—ரை. இச்செய்யுள் மேற்கூறும் பூசாவிதியைத் தொகுத்துக் கூறுகின்றது. சிவநிட்டை புரிவோர்க்குச் சங்கிரக விதியாகக் கூறியதெனினும் ஆம். இல் - வீடு. யதிநைட்டிகர்க்காயின் மடமெனக்கொள்க. நீங்குந் தீங்ககல - நீங்காமை பொருந்த. ஒருமை தூங்கு - சிவானனிய பாவனையில் தற்செயலற்றிருப்பாயாக. ஓதலாதி - ஓதல் ஓதுவித்தல் பொருளைக் கேட்டல் பொருளைக் கேட்பித்தல் சிந்தித்தல் என ஐந்து. அருட்டொழில் - ஞானத்திற் கிரியையாகிய ஞானபூசை.

ரு. கு.—ரை. தர்ப்பித்து - மாத்தியானிக சந்தி செய்து. சன்மார்க்கமான ஞானந்திகழுந் தென்வாயில் - பரசிவம் தட்சிணாமூர்த்தத்தை அதிட்டித்து திருநந்திதேவர் முதலியோர்க்குச் சன்மார்க்க ஞானமுபதேசித்தலால் அவ்வாயில் சிறப்பித்துக் கூறப்பட்டது. துவாரம் - தட்சிணத்துவாரத்தில். இது - சன்மார்க்க ஞானத்தை. பாரித்தாண்ட - பரம்பரையிற் றந்தருளிய. எண்மர் - ஆறாவது செய்யுளில் கூறப்படுவோர்.

விரவு முமா பதிசிவனன் மறைஞான சம்பந்தன் மேவு பரத் தருணந்தி மெய்கண்ட தேவன், திருவளரும் பரஞ் சோதி சத்தியமெஞ் ஞான தெரிசனிகள் *சனற்குமரன் திருநந்தி யிருபான், மருவுறவுள் வலமிடமா முன்னர்வட முகமாய் வருபவரை யபிமுகமாய் மன்னுவிக்க வுரைசே, ரருள்புரிமுத் திரையினுருத் திரமெந்திரஞ் சலிசே ரைஞ் செழுத்து நந்திக்கா வணைவரையு நிறுத்தே. ௬

* பரநந்தி திருவாயிலிருபான் என்றும் பாடம்.

சந்தான குரவரிவர் சமையாங்க மக்கந் தக்கவட நீறுமறை தழனிருதி குடபால், வந்தாரிற் சம்பந்தர் வாகீ சர் பெருமாள் வாதவூர் மன்னிவர்கள் வாயுமுதல் வட பாற், செந்தாது மலரானற் சமையகுர வரையுஞ் சேர்த் துத்தம் பெயர்முடிவிற் றிகழ்* திருமந் திரத்தா, னந்தா பங் கழிந்தகல மொழிந்துகொள் பூந் தவிசி னுதனுக்கா தனமாக நடுமலரா லிறைஞ்சே. ௭

* தரு என்றும் பாடம்.

---

௬. இது சந்தானுசாரியரைத் தட்சிணத்துவாரத்து பூசிக்கு முறை கூறுகின்றது.

௭. சு.—ரை. சமயாங்கம் - சமயத்திற்குரிய அங்கமாகிய. அக்கந்தக்க வடம் - உருத்திராக்க மாலை. நீறு - திருநீறு. முறை - சிவஞானபோதம். இவை மூன்றையும் முறையே தழல் நிருதி குடபால் - அக்கினி திசையிலும் நிருதி திசையிலும் மேற்றிசை யிலும் பூசிக்க.

பெருமாள் - சுந்தரமூர்த்திசுவாமிகள். சமயகுரவரையும் - சமயகுரவர் நால்வரையும். தம் பெயர் முடிவில் திகழ் திருமந்தி ரத்தால் - அவரவர்கள் பெயர் முடிவில் ஸ்ரீபஞ்சாக்கரத்தைச்சேர் த்து. பெயர் முடிவில் பஞ்சாங்கரத்தைச் சேர்த்தல், சந்தானுசாரி யர்கட்கும் சமயாங்கங்கட்குங் கொள்க. மொழிந்து - பூசித்து. கொள் - பூசைக்கு யோக்கியமாகக் கொண்ட. தவிசின் நடு நாத னுக்கு ஆதனமாமலரால் இறைஞ்சு எனக் கூட்டுக. நாதனுக்கு - தட்சிணமூர்த்திக்கு.

அஞ்செலிசெய் திருந்துடனு னல்லேன் ஞான மண் ணலதி யானெனதென் றிட வமைந்த, புஞ்சமலி தனு கரண புவன போகம் பொய்யெனமெய் யுணர்த்தியவப் போத மேநற், றஞ்சவுட லிந்தவுட லெடுத்த வீடு தான ழியு மளவுமதிற் றங்குவோர் போல், வஞ்சமுட னமர்து மெனு மிதுமேல் கொள்ளும் வாய்மையது பூதசுத்திப் பான்மை யன்றே. அ

ஒங்குடலந் திருக்கோயி லுள்ளிடமுள் ளிடமா முட் டொழிலும் புறத்தொழிலு முரியவரே புரிவார், தீங்கிலு யிர் சிவலிங்கஞ் சிவன்சீவன் *யாதுஞ் செயவேண்டா, பசுஞானஞ் சிவஞானஞ் சிறந்த, பாங்கதாநம் மன்பளவி லுபகரண பூசைப் பரிசதுநற் றெரிசனமெய்ப் †பணிமு முழுது மடங்கத். தூங்கிடனம் மின்புருவச் சுடராய் நிற்குந் தொன்மையதந் தரியாகத் துறைய தன்றே. க௦

* யாவும் என்றும் பாடம். † பணிமடங்க என்றும் பாடம்.

அ. கு.—ரை. ஞானமண்ணலது - சிவனுற் றரப்பட்டது. யான் எனதென்றிட வமைந்த - அகங்கார மமகாரத்திற்கு ஏதுவா கிய புஞ்சம் - கூட்டம். வஞ்சமுடன் - பிரபஞ்சத்தோடு, உடலில் நம்பிக்கையின்றி எனினும் ஆம். இது பூதசுத்தி கூறுகின்றது.

க௦. கு.—ரை. உயிர் சிவலிங்கம் - உயிரே சிவலிங்கம். உயிர் ஈண்டு ஆன்மா. அச்சிவலிங்கத்திற் சிவனே சீவன். யாதுஞ் செயவேண்டா - தற்போதத்தால் எதையுஞ் செய்ய விரும்பாத மெய்ப்பணிமுழுது மடங்கத் தூங்கிடல் தரிசனம் இது அந்தரி யாகங்கூறுகின்றது.

ஞானமே னியனேகனி நாட வேறோர் ஞானமக்கின்றதுதா ஞுமாயே நிற்கு, மானபோ தர்ச்சித்த லரிதாமென்னு மன்னதுமந் தரியாக மாகும்போதத், தானமேவின்வினைகள் பலியா தானுற் றன்செயலற் றவனிறைவிற்ருனு மூழ்கிப், போனபோ தறியாத சிவானு போகம் புணர்பூமி சிவபூமிப் பொலிவ தன்றே. கO

நாலிரண்டு திருவுருவ நோக்கி நோக்கா னலங்கொடிர வியசுத்தி நயந்து சென்னிப், பாலியங்கர்க் கியமலாற் றனையர்ச் சித்துப் பத்துருமந் திரசுத்தி பயிற்றி நாதன், மேலிலங்கு மலரொதுக்கி யுருவ நோக்கி வியலனிறைவுணர்ந்தெவையு மேனி யான, சீலமுமங் *சுறிவுதிருவுருவ மான சிறப்புமுணர்ந் திலிங்கசுத்தி சேர்த்திடாயே. கக

கருவு என்றும் பாடம்.

இன்புருவச் சிவன்படைத்தற் கிச்சை காலத் திசைவுழிவித் தியாதேகி யாகியெழிற் கிரியை, முன்பெருகக் குடிலையினை யடைந்து நாத முந்துவிந்தக் கரமனுநன்மொழிமுறையே வகுத்துத், தன்பொருவின் மந்திரத்தாற் சதாசிவாதி யுதவிச் சகவிரிவு தருமாற்கீழ்ச் சரியைாாதி நால்வர்க். கன்பமரத் துன்பமலம் பவமிருதி வழிதீர்த் தறமுரைத்த கருணையனை யர்ச்சியுமிச் சியுமே. கஉ

கO. இது இன்னுமொரு வகையால் அந்தரியாகமும் தானசுத்தியுங் கூறுகின்றது.

கக. இது திரவிய சுத்தியும் மந்திர சுத்தியும் இலிங்க சுத்தியுங் கூறுகின்றது.

கஉ. இது இறைவன் பஞ்சகிருத்தியஞ் செய்யுமுபகாரங் கருதி வழிபடவேண்டுமெனக் கூறுகின்றது.

ஆதியா தார[illegible]தனமேற் பரவிந்தை யறங்கடரு மூர்த்தி, சோதியது மூர்த்திமா னின்ப மூர்த்தித் துணைவனென மும்மலர்கள் துதையச் சாத்தி, யேதடியென் றிடிலடியா னென்றறநின் றதுதா னெங்ஙன்மா மருண்முகஞ்செய் யியல்புதிரு முகமா, மூதுயிர்மே லேதாகு மதுமுடியா மிவற்றுள் முன்னுதவு பாத்தியாச மனவர்க்கிய முறையே. கரு

ஆயது பாதியளித் தலரகற்றி யேந்தி யருளுருவிற் *றயிலக்காப் பவைசாத்திக் கழித்து, நாயன்மா ரானைஞ்சி னிரண்டுபே ருரையார் நவையெனமற் றிரண்டொன்று நயந்துள்தான் மூலக்கண், பாயுநீர் கன்னலினீ ரிளநீர் மும்மைப் பழங்கொணீர் மதுநீர்முன் பாரித் தாட்டி, மேயமேவலா தேலநீர் வேண்டளவும் பொழிந்து விளங் கொலிய னீர்புலர விரித்துச் சாத்தே. கச

* றயிலங்காப் என்றும் பாடம்.

கரு. இது ஆசனமூர்த்தி மூலம் பூசிக்கவேண்டிய முறையும் திருவடி திருமுகம் திருமுடியில் முறையே பாத்தியாசமனர்க்கிய விதியுங் கூறுகின்றது.

பரையுயிரில் யானெனதென் றறநின்ற தடியாம்
  பார்ப்பிடமெங் குஞ்சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகு மென்றிவ் [றின்றித்
  வுண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறொன்
தரைமுதலிற் போகாது நிலையினினில் லாது
  தற்பரையி னின்றழுந்தா தற்புதமே யாகித்
தெரிவரிய பரமானந் தத்திற் சேர்தல்
  சிவனுண்மைத் தரிசனமாச் செப்பு நூலே.

உண்மைநெறிவிளக்கம். செ. ௬.

கச. சூ.—ரை. அருளுரு - பரையாதி பஞ்சசத்தி வடிவம். ஆனைஞ்சில் - பஞ்சகவியத்தில். இரண்டு - கோசல கோமயம். பேருரையார் - பெயருஞ் சொல்லார். இரண்டு ஒன்று - பால் தயிர் நெய். ஒலியல் - பரிவட்டம்.

*வாசநாண் கௌபீனம் வசனுபி சாத்தி மலர்த் தவிசி விருத்திமல ரடிவி ளக்கி, யாசமனந் திருநீறர்க் கியமு நல்கி யடலேறு மிருடிகளு மடைவே போற்றிப், பூசையன லாசையினற் றேசிகர்க்கு நல்கிப் புரிந்தொருமை நினைந்திறைமுன் புனித மாக்கித், தேசுமிகு திருவமுது தெண்ணீ ரேற்றித் திருந்தியவர்க் கியசெலத்தாற் சுத்தி சேர்த்தே. கரு

வாசமலி மலர்சாத்திச் சேலை சாத்தி என்றும் பாடம்.

இனக்குநெறி யர்ச்சித்துக் காவல்வளை யமுதீந் திறையமுது செயவிருகை யேந்தியிரந் துரைத்துத், தனக்கமைய விளக்கியகைச் சந்து கந்தந் தாரணிதாம் பூலாதி தயங்க நல்கி, யனைத்துலகுந் தருமாற்கீழ்த் தென்முகமண்டலத்து ளன்பர்தொழ வீற்றிருக்கை யறிந்தடிகள் விளக்கிக், கனற்கமழுந் தூபாதி *யாலத்தி நீறுண் கவரிகுடை கண்ணுடி கருதிச் சேர்த்தே. கசு

யாராத்தி என்றும்-பாடம்.

கரு. த.—ரை அடலேறு - திருநந்திதேவர். இருடிகள் - அகஸ்தியர் புலஸ்தியர் சனகர் சனந்தனர் சனுதனர் சனற்குமாரர் எனுமறுவர். இவருள் சனந்தனர் சனுதனரை விலக்கி நால்வரெனவும் அகஸ்தியர் புலஸ்தியரை விலக்கி நால்வரெனவுங் கொள்வாரும் உளர். சேலை - பரிவட்டம்.

அனலாசையில் - அக்கினிதிசையில். நற்றேசிகர்க்கு - தனது ஞானசாரியருக்கு. பூசை நல்கி எனக் கூட்டுக.

கசு. த.—ரை. சந்து - சந்தனம். கந்தம் - சண்டு புனுகு. தார் - மாலை. அணி - திருவாபரணம்.

ஐயைந்தா மக்கவட மங்குலிநான் கணிந்து வங்குட்டங் கொண்டொருநான் கருணமங் கணித்துக், கையெஞ்சா மலரோடஞ் சலிசெய்து கடவுள் கற்பித்த தொழிவிதுநீ கண்ட பண்டம், கொய்யும்பூ மலராதி கலாதி நாதன் கொளுவியபோ தெனவுணர்வுன் குலவு பூசை, செய்கென்று லென்செய்கே னிட்டபணி யுருவச் செல்வநீ கொள்கென்று திருமுன் சேர்த்தே. கஎ

எழுந்தலர்தூய்ப் பணிந்திருந்து நியாத மெய்தி யெழிற்குரவ ரிறைவன்று ளெய்த வேத்தி, மொழிந்தலர்கோவிலையணுகப் பண்ணு வித்து முன்னுதவு பாத்தியாச மனவர்க்கிய முறையே, பொழிந்தலர்தூய்ப் பீடத்துந் தண்டிலத்து மிறைஞ்சிப் போக்குகவர்க் கியஞான பூசையிது புனிதற், கழுந்துபர குரவர்தரு முச்சிட்ட நுகர்தற் காமல்ல மாலியமென் றறைந்தனவா கமமே. கஅ

ஆக செ. ௬அ.

ஞானபூசை முற்றும்.



திருச்சிற்றம்பலம்.

கஎ. கு.—ரை. ஐயைந்தா மக்கவடம் - இருபத்தைந்து மணியாலாகிய செபமாலை. ஒரு நான்கு - நான்கு வட்டம். கையெஞ்சா - கைநிரம்பிய.

கஅ. கு.—ரை. குரவர் - சந்தானசாரியராதியர்களை. இறைவன்றுள் - தட்சிணாமூர்த்தி திருவடிகளில். முறையே - சங்காரக்கிரமமாக. அல்லமாலியம் - இது நின்மாலியமல்ல.


ஸ்ரீ குருசரணாரவிந்தாப்பியாந் நம : ||



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

௫. ஞானதீக்ஷா விதி.



மன்னுபல பிறவிகளின் முன்னே செய்த வைதிகமா
தவவலியான் மருவிச் சைவந், தன்னில்வளர் சமயவிசே
டாதி யான சரியைகிரி யாயோகஞ் சரித்து ஞான, நன்
னிலைமை பெறச்சத்தி நிபாத மேவி நாடுமள வினிலி
றைவ னருளா னண்ணும் பன்னரிய பரகுருமற் றவனை
நாளும் பணிந்துபணி செய்ய வந்து பலிக்குமன்றே. ௧

அன்றாவ தாதிரைநற் பங்குனியா மதனு ளருட்பூர
முத்திரமு மனந்தரத்து ளதற்பின், குன்றாத புகழ்மூல
மாவணியிற் சதயங் கோதிலருட் சோதியிவை யாயினு
மேற்கொள்க, வென்றாரொன் றினிலெல்லி முதற்சாமத்
தமைக்க வெழிலெயிறு விளக்கியெழிற் புனற்படிந்து
நியதி, நன்றாகப் புரிந்தாசா னடிவிளக்கிக் குடித்து நன்
கமரும் பரிகலமு நவையகல நுகரே. ௨

---

௧. கு—ரை. இதற்கு புறச்சமயநெறி நின்றும் என்னும் திருவிருத்தம் காண்க.

இந்நூல் பக்கம் ௬.

பரகுரு - ஞானாசாரியன். இறைவனருளாற் பரகுரு நண்ணும் எனக் கூட்டுக.

அவனை - ஞானாசாரியனை. வந்து பலிப்பது, ஞான—நன்னிலைமை

௨. கு.—ரை. அன்றாவது - ஞான தீட்சைக்குரிய நாளாவது. சோதி - சுவாதி. ஒன்றினில் - மேற்கூறிய நாட்களொன்றில்.

நுகர்ந்ததுவே புனர்ச்சனன சுத்தியென்பர் கற்ளோர்
நுவன்றவைகேட் பரியவிட நுண்களப மெழுகி, யகன்ற
ருவெண் சுதையொழுக்கான் மேற்கட்டி யதனு லலர்தரு
பூந் தொங்கலா லலங்கரிப்பித் ததனுட், புகுந்தணுகு மவ
ன்முற்செய் திருவிளக்கு ஞான போனகமு மதற்குரிய
பொருள்புனல் பூமுதலாப், பகர்ந்தவுப கரணங்கள் புரிவி
த்துக் கபாடம் படியவடைத் திடம்பண்ணிப் படாம்பீ
டம் படுத்தே. ௩

படுத்தமலர்க் கவிசின்மிசை யாற்கீழன் றிருந்து பர
ஞான கதியளித்த பரமனை யன்புடனே, யடுத்தநெறி யரு
ச்சித்துத் திருஞான முந்நீ ரடைக்காயும் படைத்தேத்தி
யமுதுசெய்வித் தகற்றி, விடுத்தலர்மூச் சுத்திபுரிந் தருண்
மைந்தன் ஞான விழியருளி யெனையாள வேண்டுமென
வணங்க, வெடுத்தருளிங் கிவன்பாசம் விடுத்தருள் செய்
நீயே யென்னுடைய னுய்கின்ற தன்மையிலென் றிறை
ஞ்சே. ௪

---

௩. த—ரை. நுவன்றவை கேட்பரியவிடம் - பிறர் ஒலி கேளாவிடம். தொங்கல் - மாலை கபாடம் - கதவு படாம் - பரிவட்டம்.

௪. த.—ரை. பரஞானகதியளித்த - சன்மார்க்கோபதேசஞ்செய்த பரமனை - தட்சிணமூர்த்தியை. திருஞானம் - அப்பொழுது நிவேதிக்குந் திருவமுதின் பெயர். முந்நீர் - இளநீர் சருக்கரைநீர் கன்னலினீர். இவன் - இச்சீடனுக்கு.

இறையோன்ற னருள்பெற்றுத் தனக்குமைந்தன் முகமா யிருத்தியவன் கரத்தலரிட் டிலங்குருவ மெரியக், குறையாத கொழுந்தினதா யண்டமுற நினைவிற் கொண் டிருமென் றாசிரியன் குறிவழியை நிகழ்த்தி, நிறையாரு முணர்வுடனே புணர்ந்துவிழி மலர்ந்து நின்மலமாய் மும் மலமு நீங்கிடவே நோக்கி மறையாவும் பரவுதிரு வைஞ் செழுத்தை மாறி மைந்தனுக்கு முரைப்பித்து வாய்மை வகுத்துணர்த்தே. ௫

உணர்ந்துணர்த்தப் புணர்ந்துடற்கட் பயனுகரு முயி ரொன் றுண்டதுநீ கண்டுகொளென் றுண்மையிலங் தவ த்தை, புணர்ந்தபதி யுபகாரம் போதவுரு மும்மைப் பொ ருவில்பயன் றிருநாமம் புனிதனிடைப் புணர்ச்சி, யணைந்த வகை யிவையொன்பா *னறியுநெறி யவற்று ளெல்லாதுந் தெரிவித்தற் காரம்பித் ததன்மேல், மணந்தருநின் கரமலர் தூய் வணங்கென்று வணங்க †வந்தனைசெய் மைந்தன் முடி மலரடிவை மரபே. ௬

* னன்றியு மற்றிவற்று என்றும் பாடம்.
† வந்தனைதன் முந்தைமைந்தர் மலரடிக்கு மாமே என்றும் பாடம்.

கு. ரு.—ரை. அருள்பெற்று - அனுமதிபெற்று. குறிவழியை - பரம்பரையில் வருந் தியானமுறையை. மைந்தனுக்கு-ஞான புத்திரனாகிய சீடனுக்கு.

௬. இவையொன்பான் என்றவற்றின் விபரம்: இந்நூலாசிரியராகிய உமாபதிசிவாசாரியசுவாமிகள் திரட்டியருளிய திருமுறைத்திரட்டினும் சிவப்பிரகாச உண்மையதிகாரத்தும் திருவருட் பயனிலுங் காண்க.

மாபாரும் பூசைமுடித் தெழுந்தருளப் பண்ணி வை த்தபரி கலமருளான் மைந்தருக்கும் வழங்கி, யாசாரு மாசானு நுகர்ந்த வடைக்காயு மனைவருக்கும் பகுந்துதவி யதுதானு மருந்தி, யிரவான தகல்பகலி லருண்மைந்தாக் கமுதின் றினஞ்சேர்த்திக் குறிகூட விறைவனரு ணிகழ்த் தித், திருவாரும் பொருணூலிற் சேர்ந்தகருத் *தின்றேற் சிவப்பிரகாசத் தினுண்மை செம்மையினிற் செலுத்தே. எ

* தினரேற் என்றும் பாடம்.

தேசுமிகு மருட்பயின்ற சிவப்பிர காசத்திற் றிரு ந்துபொதுச் சங்கற்ப நிராகரணந் திருத்தி, யாசிலருள் விணவெண்பாச் சார்பு நூலா லருளெளிதிற் குறிகூட வளி த்து ஞான, பூசைதக்க காரணமுன் புகன்றதனிற் *புகு ந்து புணர்விக்க சிவஞான போதசித்தி வழிநூல், மாசின் சத மணிக்கோவை முன்னூல் சான்று மருவுதிரு முறைத் திரட்டு †வைத்தனன் மன்னுயிர்க்கே. அ

* புரிந்து என்றும் பாடம். † வைத்தனமன் என்றும் பாடம்.

ஆக செ. ௫௯.

ஞானதீக்ஷாவிதி முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

எ. கு.—ரை. மா பாரும் பூசை - முன்னர்ப் பீடத்திற் பூசித்திருக்கும் பூசையின் சேடத்தை. ஆசாரும் - ஞானவாசனு க்கப்பொருந்திய. அடை - வெற்றிலே. காய் - பாக்கு. இனஞ் சேர்த்தி - அடியார் கூட்டத்துச் சேர்த்து. பொருணூல் - ஞான சாத்திரம். உண்மை - உண்மை யதிகாரம். செம்மையினில் - அனுபவச் செந்நெறியில்.


அ. கு —ரை. பொது - பொதுவதிகாரத்தாலும். சங்கற்ப நிராகரணம் - சங்கற்ப நிராகரணத்தாலும். திருத்தி - சீடனுக்குண் டாகிய சந்தேகங்களைப் போக்கி. அருள் - திருவருட்பயன். திரு த்தி அளித்து புணர்விக்க. இதற்கு முன்னூல் சான்று போத சித்தி சதமணிக்கோவை திருமுறைத்திரட்டு வைத்தன என முடிக்க.

ஸ்ரீ குருசரணாரவிந்தாப்பணமஸ்து நம

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ச. ஞானாந்தியேட்டி.



உடற்பொறைவிட் டுயிருணர்வி னுடனடத்தி யண்ண
லுருவி லுரு வொடுக்குநெறி யுயர்மயான, விடத்திலொரு
கடத்திலிறை யிருத்தி யாவு மெய்தும்வகை திருநாம
மிறைஞ்சி யங்கி, யடுத்ததொரு குண்டத்திற் றண்டிலைத்தி
லர்ச்சித் தாகுதியும் பலவழங்கி யட்ட மூர்த்தி, தொடை
க்கணா னுருவினையா லிதுகவர்க வென்று தொழுதிரந்து
சவமதனைச் சுத்தி செய்தே. க

க. குறிப்புரை. உயிர் உடல் பொறைவிட்டு என மாறுக
உணர்வின் உடல் - அறிவிற்கு இருப்பிடமாகிய புரியட்டகசரீரம்
அண்ணல் உருவில் - பதியினது இச்சா ஞானக்கிரியா வடிவில்
உரு - ஆன்மாவினது இச்சா ஞானக்கிரியா வடிவத்தை. அண்ண
லுருவில் உரு, என்பதற்கு பதியினுடைய அட்டமூர்த்தத்தில் ஒன்
றாகிய அங்கியில் ஆன்மாவின் தூலசரீரத்தை எனினும் ஆம்.
நெறி - அந்தியேட்டி மார்க்கம். ஊர்ப் பொது மயானமல்லாத
வேறிடமென்பார், உயர் மயானவிடத்தில் என அடைகொடுத்
தோதினார். பிராகிருத அந்தியேட்டியினும் வேறென்பார். ஒரு
கடத்தில் என்றார். கடம்-கும்பம். இருத்தி-ஆவாகித்து. யாவும் -
பூசாவிதிகள் யாவும். திருநாமம் - ஸ்ரீபஞ்சாக்கரம். இறைஞ்சி -
அர்ச்சித்து. தொடை - வரிசை. அரனுருவினையால் - அரனுரு
விலொன்றாக உளையாதலால். இது - இத்தூல சரீரத்தை.

அங்கியினுங் கும்பத்து மாறொருமை யுன்னி யவ
னுடலா குகிபண்ணிற் றாகத் தானே, செங்கனல்வந் தைம்
பூதச் சிதைவிறகி லென்றன் சிரமணுகப் பூரணையைத்
திருத்தி நாமப், பொங்குபுன * லிடையாகச் சூழ்ந்து
போந்து புனன்மூழ்கி யன்றமுதற் புனித னன்பர், மங்
கலமார் தரவமுது செய்வி யாண்டு வரவரவுஞ் செயவரு
ளே மன்னுமன்றே. உ

* லிடமாக என்றும் பாடம்.

ஆக செ. ௫௮

ஞானந்தி யேட்டி முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

உ. கு.—ரை. அங்கியினும் - குண்டாக்கினியினும். அர
னொருமையுன்னி - அரனை ஏகீகரணமாகப் பாவித்து. அவன் -
அந்த விதேக முத்தியடைந்த ஞானியினது. சிதைவிறகில் - சிதை
யாக அடுக்கிய விறகில்.

ஐம்பூதச்செங்கனல் வந்து சிரமணுக பூரணையைத் திருத்தி,
என மாறுக. ஞானி சீவன்முத்தி காலத்துபாசித்த ஞானக்கியின்
வேறென்பார் ஐம்பூதச் செங்கனல் என்றார். பூரணை - பூரணா
குதி. நாமப்பொங்குபுனல் - ஸ்ரீபஞ்சாக்கரத்தான் முன்பூசித்த
கும்பத் துவாரங்களின் வழியே பெருகும் நீர். இடையாகச்
சூழ்ந்து - இடமாகச் சுற்றி. புனிதனன்பர் - சிவனடியார்கள், சிவ
ஞானிகள் எனினுமாம். *அன்புறுதொண்டர், என்றார் முன்னும்.
அமுது செய்வி - மகேசுரபூசை செய்வாயாக. அமுதுசெய்தல்
உண்ணுதல் என்னும் பொருள் தரும் ஒரு சொல். இது சைவ
வமக்கு. யாண்டு வரவரவும் - பிரதி வருடந்தோறும். செய -
மகேசுரபூசை செய்ய.

ஸ்ரீ குருசாணாவிந்தாப்பியாங் நம : ||


---

* ஞானபூசா காரணம் செ உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ரு. போசன விதி.



திருவருளர்ச் சனையிதனைச் செலுத்தி முன்னீ செய்த
வினைப் பயனருந்தச் சிந்தை *யாறி, லிருவர்மே லொருவ
னுள னில்லா தில்லை யிடவுரியோர் கொடுவரதின் றிடுவிப்
பிக்கு, மருளுடனே யிடுபவர்தா மான வாணும் அவரே
வல் புரிதுமினி யன்றி யப்பா, லொருவரிதென் னுள்ள திட
வல்ல துண்ணு முண்மையு ணிடுசோறென் றுரைக்கு
மன்றே. க

* யாகி என்றும் பாடம்.

இந்தவகை கண்டுமுள திடுவோர் தங்கட் கிச்சைபக
ர்ந் தறுசுவையி லின்ப மெய்திச், சிந்தனைகொண் டவாத
பொருட் கிரங்கி யுண்ணுந் தெட்டுணு திடுசோறுச் செப்பு
மித்தாற், பந்தமுறும் வினைகழிந்தாற் றம்மி லொப்பர் பர
னவனு முன்னவனைப் பணிகொண் டாணும், வந்தபடி கோ
டுமெனு மிதுவுங் கொள்ளார் வாய்மையார் தாமாண்ட
தூய்மை யோரே. உ

க. குறிப்புரை. சிந்தையாறில் - சிந்தைசெய்யில். ஆற்றில் என்பது ஆறில் என நின்றது. இருவர் மேலொருவன் - இருவர்க்கு மேலாகிய ஒருவன். இல்லாதில்லை யிடவுரியோர், இடுபவர் சிலரேயென்பது தோன்ற இரண்டெதிர் மறையாற் கூறினார். ஒருவன்உளன் அவன் இடுவிப்பிக்கும் எனக் கூட்டுக. பிச்சையிடுதற்குரிய பொருள் அறத்தாற்றினீட்டப்பட்டதாக இருக்கவேண்டுமென்பதும், இடுபவர்பெண்டிரல்லர்என்பதும், ஆணும், அருளும் ஒழுக்கமும் உடையராய் இருத்தல் வேண்டும் என்பதும், தோன்ற அருளுடனேயிடுபவர் தாமானவாணும் என்றார்.

உ. கு.—ரை. அறுசுவையில் - ஆறுவகைப்பட்டசுவையையுடைய உணவில். மாண்ட - மாட்சிமைப்பட்ட. தூய்மையார் இதுவுங் கொள்ளார் எனமுடிக்க.

பண்டைவினைப் பழஞ்சோறுப் பானுக் கீந்த பாத்தி
ரசே டஞ்சடாப் பையு ளுேய்க்குக், கண்டகடு வெனக்
கொண்டு காற்கு மீந்து கைப்புனல்சூழ்ந் துண்ணீர்நோய்
கனல மாந்தி, யுண்டுகடித் தகித்துறுஞ்சி யுட்கொண்
டாறு மொருநாளுந் தீராத வுள்ளுறுநோய் கூட்டோ,
டண்டனகற் றினியென்றைஞ் செழுத்து மோதி யருந்து
*மசந் திடுமளவு மாறுந் தானே. ௧

* மருந்திடுமளவு என்றும் பாடம்.

ஆரமுத நீரருந்தி யெச்சிலச்ச மகற்றி அடைக்காய்
நற் கடுக்காய்சுக் கடுத்ததொன்றை மென்று, கூரியபே
ருணர்வுடனே தூங்கு கங்குற் குளிர்வெம்மைக் கிசை
பூசை கொள்ள நல்கி, யோருணவு நிவேதியா துண்ணு
வாய்மை யுடையையா யுயர்ஞான யோக முற்றுச், சாருமரு
ணீத்திறையு முய்த்துணர்க ஞான சரிதமிது மெய்கண்
டான் சந்தான த்தே. ௨

ஆக செ. ௬௨.

போசன விதி முற்றும்.

ஞானசார சாத்திர பஞ்சகம் முற்றிற்று.


திருச்சிற்றம்பலம்.

---

௧. கு.—ரை. முற்பிறப்பில் செய்தவினைப்பயன் என்பார் பண்டைவினை, யென்றும். வினைப்பயன் புதிதல்லவென்பார் பழஞ் சோறு, என்றுங் கூறினர். கால் - பிராணாதிதசவாயுக்கள். சூழ்ந்து - சுற்றி. நோய் கனல - உதராக்கினி.

௨. கு.—ரை. ஆர் அமுத நீர் - உண்ணுதற்குரிய அமுதமா கிய நீர் அருமையாகிய நீர் எனலும் ஒன்று. அரியகுணம் நீர்க்கு. துப்பாக்கித் துப்பார்க்கு துப்பாய தூஉமாயிருத்தல். அடுத்த தொன்று - கிடைத்த தொன்றை. தனக்குப்பொருந்திய தொன் றை எனலும் ஆம். கங்குல் தூங்கு, எனமாறுக. குளிர்வெம்மை - சீதோஷ்ணகாலம். வாய்மை ஈண்டுவிரதம். ஞான சரித மிது மெய்கண்டான் சந்தானத்து - இது மெய்கண்ட சந்தானத்தார்க் குரிய ஞானசாரம். சரிதம் - ஆசாரம்.


ஸ்ரீ குருசரணாரவிந்தாப்பியாந் நம: ||



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தத்துவப் பிரகாசம்.



ஞானபூசைத்திரட்டிற்குரிய செய்யுட்கள்.



ஞானத்திற் சரியை.

அனுட்டானம்.

க. ஞானிகளி னயிட்டிகர்க்குச் சரியையாதி யிலையா நற் சா தகிகளுக்கு முற்சொன்ன சரியை, மானமுட னிரவு சூக் குமவுடலிற் புசிப்பு மாட்டியவத் தகைநினைந்து மீட் டுந் தூல, மானதுகண் டிருஞ்ச லத்தாற்சுத்தி பண்ணி யஞ்செழுத்தா னீறிட்டுத் தத்துவங்கள் சடமாத், தான வுட னுசமித்தஞ் செழுத்தா லங்க காநியாசஞ் செய்தட்ட மூர்த்திகடாப் பணமே. ௫௬

ஞானத்திற் கிரியை.

ஞானபூசை.

உ. ஆங்கவைதான் விசேடத்திற் கூடநூற் றெட்டா மடைவிவைகள் செய்வதுவே யோகத்திற் கிரியை, நீங்கி ஞா னந்தன்னிற் கிரியை தானு நிகழுமா னதநான நிறுத் திப் போந்து, பாங்குபடத் தத்துவங்க ணீங்கல் பூதசுத்தி பகர்சிவதத் துவமாக்க றலசுத்தி பகரிற், நீங்ககலவி மூந் தபூ மஞ்சனநீர் கொண்டு திகழுமஞ் செழுத்துமாறி நியா தங்கள் செய்யே. ௧௧௫

௩. செய்ததற்பி னஞ்செழுத்தா லர்க்கியங்கற் பித்துத்
திகழ்பீடம் வித்தையாய்த் தியானஞ் செய்து, மெய்யதெ
ற்குத் துவாரங்கெதன் மேல்சாரி யிருந்து விதிமுறையே
பொறிகரணங் குணமுமிரு மிருளு, மையலறச் சடமிவற்
றிற் செல்லுமுயிர் தானு மன்னருளே யெனவுணர்த லான்
மசுத்தி யாகு, மையமற வானந்தத் தழுந்தத் தூங்க லந்த
ரியா கந்தாறு யறையு நூலே. ௧௧௪

௪. விழித்ததற்பின் சிவன்பார்வை யாகக்கொண்டு வே
ண்டுதிர வியநோக்க றிரவியசுத் தியாகுங், கழித்ததற்பின்
றென்வாயிற் றுவாரம் பூசித்துக் கால்வலமா யுள்புகலாய்க்
கருதிவட கீழ்பால், வழுக்கில்கவு ணியன்வாக்குக் கிறை
வனு ரூரன் வாதவூ ரன்சமய சந்தான குரவர், இழுக்கி
னந்தியாதி யிவரங்கி யந்தமாக விருத்தியா தனமாக்கி
யிலிங்கங்கை யாக்கே. ௧௧௫

௫. ஆக்கியபி னைங்தெழுத்தாற் புராதனத்தைக் கழித்
தே யரியபா வனையாலே யிலிங்கசுத்தி செய்து, நீக்கமி
லாப் பஞ்சகவ்வியம் பஞ்சாவ மிர்த நிரம்பியமஞ் சனமுத
லா வேண்டுவன நிறுத்திப், போக்கியபின் பீடத்தி லிருத்
திக் கண்ட புகழுமா னந்தவுருப் பரையிற் போந்து, தாக்
கியஞா னத்தழலே வடிவாகி யிச்சை தன்னிறு னடிப்பதிந்
தச் சகளந் தானே. ௧௧௬

௬. தற்பரந்தா னெவ்வுயிரு நெறியறியா மையினாற்
றூனைந்து முகமாகச் சகல வாகமு, முற்பவித்த ளித்தருளுங்
குருவாகு மென்றங் கோர்வாம லெவ்வுருவு மொன்றாகக்
கண்டு, கற்பநிலை யத்துவா வேபீட மாகிக் கருதியஞா
னத்தழலேல் யிலிங்கமா மதனிற், சிற்பரனே ராக்கண்டு தெ
ளிவிக்கு மொளியே திருமேனி யாக்கொண்டு செய்வதாச்
சனையே. ௧௧௭

௭. பரையுயிரா யானெனவொன் றறநின்ற விடமே பாதமாம் நிறைந்தபரா னந்தமே முகமா, முறையிலுயிர்க் கானந்த மேவிடுகை முடியென் றுன்னியுரைத் தடைவிலே பாத்தியாதி கொடுத்து, நிரையிலே மலர்சாத்திக் களபம் விரை யிண்டை நிறைமாலை கண்ணிதொடை நேர்மலர்கள் சாத்திப், புரையிலுப சாரங்கள் பதினாறு மெல்லாம் பொருவிலாப் பத்தியொடும் போதத்தாற் சமையே. ௧௧௮

௮. கொடுப்பாயு நீகொடுத்தல் கொள்வாயு நீயே கொண்டு புசிப்பாயுநீ புசிப்பு நீயே, அடுத்துடனே புசிக்கின்ற பதார்த்த நீயே யாருன்றன் செயலறிவா ரளவினிலை வாறால், விடுத்தபணி யிதுவல்லாற் கண்ட தில்லை வேறல்லை யொன்றல்லை விளங்கா யல்லை, யெடுத்தவைநின் பாரமா மெனக்கொர்செய லின்றெறன் றிறைவனருட் பணியாநின் றிறைஞ்சி டாயே. ௧௧௯

௯. தாவரங்கள் சங்கமங்கள் பூதமைந்து தத்துவங்க ளாதாரங் கலைகளைந்து, கோவிரவு மக்கரங்க ளியந்திரங்கள் முதலாய்க் கொடிய மந்திரங்கள் குணம்விந்து நாதம், யாவையினி னொன்றினினீ யுண்டென்று லங்கே யில்லாமை குறைவுநிறை வுடைமை யல்லை, தேவனே யெவரெவரெப் படிச்சிந் தித்தார் சிந்தித்த விடத்தந்த வடிவாகை இடமே. ௧௨௰

௧௰. துதித்திறையை யொடுக்கிடுக புசிக்குங் காலைத் தூய மருந் துடற்கென்க வதுவு மின்றி, விதித்தவிதி யவன்விதியா னம்வசமன் றென்று விருப்பின்றி யவன்வசமாய்ப் புசிக்கில் வினையேறா, வதற்பின்பு ஞானநூ லோதலோது வித்தல் அப்பொருளைக் கேட்பித்த றன்கேட்டல் பலகாற், றிதப்படவே சிந்தித்த லைந்து முன்னைத் திகழ்பூசைக் கொக்குமெனச் செப்பு நூலே. ௧௨௧

பிட்சா விதி.

கக. அவைசலிக்கின் மெய்ஞ்ஞான நெறியுடையோ ரவையி னணைந்தவர்தம் மேவல்வழி யதினிற்க வடைவின், இவை ஞான நெறியாகும் பிச்சைக் கேகி லிறையேவற் படிசெய்க வந்ததிடக் காண்க, நவமான தொருவன்பா லிரத்த லாசை நசைவாஞ்சை காமம்வினை நகைகோப மிடும்பை, பவ லோப மதமோடு மாற்சரியந் தீமை பாவிகணட் புப்பிற னில் பரிவகலப் பாரே. கஉஉ

ஞான தீட்சை.

கஉ. ஞானமா மவுத்திரியுஞ் சத்திய நிருவாண நன்கமை ந்த மாணுக்கன் றன்னைச் சோதித், தூனமிலா நெறிகண் டாற் றூன்சிவனுய்ச் சமைந்தங் குயருமிரு ளத்தசா மத்தி னெல்லை, மோனமுடன் சீடனுற் றனைப்பூசிப் பித்து முழு த்தமுவி னடனுகத் தன்னைப் பாவித், தீனமிலா மலர்காங் கொண் டெதிர்பார்க்க நிறுத்தி யிவனையறு வகையினீங் கிடுமாறு பாரே. கஉ௩

க௩. பார்த்துப்பின் மலரிட்டு வணங்கப் பண்ணிப் பாதத் தைத் தலைகண்ணு நெஞ்சினுமே பதித்துச், சேர்த்தசிவ வத்தமவன் றலையிலே வைத்துத் திருவெழுத்தை மாறிய வன் செவியிலுரைத் திட்டே, யார்த்தசாத் திரமெல்லா மெடு த்துக் காட்டி யீசனுயிர் பாசமிவை யெனுமாறு முரைத் துக், கூர்த்தவறி வுக்கறிவு கூடு மாறு கூட்டிவழி படுமு றைமை கொள்ளவே பணியே. கஉ௪

ஞானவபிடேகம்.

---

௧௪. உரைத்தவழி மிகத்தெரிந்து சரிதை யாதி உண்மை களி னுள்ளசாத் திரங்கடனை யுணர்ந்து, புரிப்பறுநிட் டையனுகித் தன்போ லானுற் புத்திரனு திக்குக்கும் பந்த னைத் தாபித்து, விரித்தவதிற் றெக்கிணு மூர்த்தி தன்னை மேவுவித்துத் தன்னைப்பூ சிப்பித்து முன்போற், றரித்து ணர்ந்து சீடனைத்தற் சொரூப மாக்கித் தானுகத் தியானத் ௧௨௫
தைச் சமைப்பிப்பா னன்றே.

௧௫. இருத்துகும் பத்தாசீ ரபிடேகஞ் செய்தங் கியைந்து தான் சாத்தியவெல் லாமிவர்க்கே யாக்கி, நிரைத்தவதி காரமுறை யாதனம் பாதுகைக ணிகழும்வா கனமாதி கொடுத்தருளி னிறுத்தித், தெரித்தவா கயநிகழ்த்து மாசா ஞர்க்கித் திருமேனி யானுனத் தியானம் பண்ணிப், புரித்த வக் கரநியாதங் கலாநியாத மெல்லாம் புகலுமஞ் செழுத் ௧௨௬
தாலே புரிக்கும்வழி யாக்கே.

ஞானவந்தியேட்டி.

---

௧௬. நிறுத்திப்பின் னீயேநாம் நமதுசெய லாலே நீசெய்யுங் கருமமெல்லாம் நாம்செய்த தாமா, லுறைக்கும்வினை யிலை யெமைப்போ லுபதேசி ஞான வுண்மையைமெய்ப் பத்த ருக்கென் றுரைக்கையபி டேகம், குறித்தசிராத் தங்குரு வைச் சேட்டரைமெய்த் தவரைக் குலவுசிவ ஞானகுரு மரபோராக் கண்டு, மறித்தமுது செய்வித்து விடலாகு மன்றி மருவியவந் தேட்டியுமாம் வருமுறைமை கேளே.

௧௭. ஈசனேடொன் றுயவர்க்கு முன்னந் தேட்டி யில்லையா யினுங்குறைக ளுடையாருண் டானல், நேசமுடன் நிரு வாண தீக்கைமுறை போல நினைந்தந்த வுயிர்நிறைவிற் கலந்ததாய் நினைந்து, தேசமருஞ் சிவாக்கினியி லுடலேயா குதியாய்த் தெகிப்பதிது ஞானவந் தியேட்டி யாகும், பாசமற விந்தநெறி யெல்லாஞ் செய்தல் பயிலுஞா னக்கிரி யை யெனப்பகரு நூலே. ௧௨௮

ஞானத்தில் யோகம்.

பஞ்சாக்கர நிட்டை.

---

௧௮. மெய்ஞ்ஞான யோகமது தெளியக் கேணீ விதியாலு மடைவாலும் வடிவுகளி னலு, மெய்ஞ்ஞானறுஞ் சத்தி களுக் கிடமாகை யாலு மிறையுண்டன் றேயிதுவு முண் டாகை யாலும், விஞ்ஞான நிலையிதுவே யாகை யானும் வேறைம்பத் தொன்றினிவை மேவா தானு, மைஞ்ஞான் ற கண்டனெழுத் தைந்தும் வந்த வழியறிந்து மொழிபவர்க் கே யழிவில்பொருள் வருமே. ௧௪௫

௧௯. எழுத்துச்சத்தியு மிதனுட்பொருள் சிவமு மாகு மிதுவன்றிச் சிவனெழுத்துஞ் சத்தியுயி ரெழுத்துங், கழி ப்பிறிரோ தானமல வெழுத்து மாமாற் கடைதலையாக் கொள்ளுமது கதிவழியன் றுகும், விழித்தடைவே வைத் திதனை யிதற்பொருளு முணர்ந்து. வேறின்றி யொவ்வொ ன்று யிரண்டுவிட்டுச் சரித்தாற், பழிப்பிலுயிர் நடுவாகும் படியறிந்து பார்க்கை பரமான சிவஞான் யோகமெனப் பகரே. ௧௪௬

சுபம்.

திருச்சிற்றம்பலம்.